**கவனிக்க.**- 2010.07.09 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II, பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1663 - 2010 ජූලි මස 16 වැනි සිකුරාදා - 2010.07.16

*1663 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | 1158 | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1159 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களாவன, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனையும் கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, யூலை மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, யூலை மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

## 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கம் கொண்ட மாகாண சபை சட்டத்தின் IV ஆவது பிரிவின் 32 (1) வது நிபந்தனையின்கீழ் வடமேல் மாகாணத்தின் ஆளுநர் அவர்களால் செய்யப்பட்ட நியமனங்கள்

| தொ. இல. | பெயர்/சேவை/வகுப்பு/தரம் | நியமனஞ் செய்யப்பட்ட பதவி/அலுவலகம்/ நடைமுறைப்படுத்தப்படும் திகதி |
|---|---|---|
| 01 | திரு. டப்ளியு. ஜீ. தயானந்த<br>இலங்கை நிருவாக சேவை வகுப்பு (I) | 2010.04.19 ஆந் திகதிய கடிதத்திற்கு இணங்க உடனடியாக செயற்படும் வண்ணம் வடமேல் மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் பதவியில் கடமை புரிவதற்கு |
| 02 | திரு. எம். ஏ. பீ. வீ. பண்டாரநாயக்க<br>இலங்கை நிருவாக சேவை வகுப்பு (I) | 2010.04.19 ஆந் திகதிய கடிதத்திற்கு இணங்க உடனடியாக செயற்படும் வண்ணம் வடமேல் மாகாண, விவசாய, சிறு நீர்ப்பாசன, கமநல அபிவிருத்தி மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் பதவியில் கடமை புரிவதற்கு |
| 03 | செல்வி ஏ. கே. டப்ளியு. எம். என். குமாரி வீரசேகர<br>இலங்கை நிருவாக சேவை வகுப்பு (I) | 2010.04.19 ஆந் திகதிய கடிதத்திற்கு இணங்க உடனடியாக செயற்படும் வண்ணம் வடமேல் மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தின் பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) பதவியில் கடமை புரிவதற்கு |
| 04 | திருமதி பத்மினி காரியவசம்<br>இலங்கை நிருவாக சேவை வகுப்பு (I) | 2010.04.19 ஆந் திகதிய கடிதத்திற்கு இணங்க உடனடியாக செயற்படும் வண்ணம் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் பதவியில் கடமை புரிவதற்கு |
| 05 | திருமதி ஜீ. கே. எஸ். சந்திரலதா<br>இலங்கை நிருவாக சேவை வகுப்பு (I) | 2010.04.19 ஆந் திகதிய கடிதத்திற்கு இணங்க உடனடியாக செயற்படும் வண்ணம் வடமேல் மாகாண சமூகசேவை, சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் பதவியில் கடமை புரிவதற்கு |
| 06 | திரு. எஸ். ஆர். ஏ. சமரகோன்<br>இலங்கை நிருவாக சேவை வகுப்பு (I) | 2010.05.03 ஆந் திகதிய கடிதத்திற்கு இணங்க உடனடியாக செயற்படும் வண்ணம் வடமேல் மாகாண, மாகாண சபை செயலாளர் அலுவலகத்தின் சபைச் செயலாளர் பதவியில் கடமை புரிவதற்கு |
| 07 | திரு. பி. பீ. எம். சிறிசேன<br>இலங்கை நிருவாக சேவை வகுப்பு (I) | 2010.05.03 ஆந் திகதிய கடிதத்திற்கு இணங்க உடனடியாக செயற்படும் வண்ணம் வடமேல் மாகாண சுகாதார, தேசிய வைத்திய, விளையாட்டுக்கள், இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் பதவியில் கடமை புரிவதற்கு |
| 08 | திருமதி ஜே. ஜீ. என். தர்மசிறி<br>இலங்கை நிருவாக சேவை வகுப்பு (I) | 2010.05.03 ஆந் திகதிய கடிதத்திற்கு இணங்க உடனடியாக செயற்படும் வண்ணம் வடமேல் மாகாண, பிரதம செயலாளர் அலுவலகத்தின் பிரதிப் பிரதம செயலாளர் (பயிற்சி) பதவியில் கடமை புரிவதற்கு |
| 09 | திரு. டி. பீ. விக்ரமசிங்க<br>இலங்கை நிருவாக சேவை வகுப்பு (I) | 2010.05.04 ஆந் திகதிய கடிதத்திற்கு இணங்க உடனடியாக செயற்படும் வண்ணம் வடமேல் மாகாண புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் பதவியில் கடமை புரிவதற்கு |

| தொ. இல. | பெயர்/சேவை/வகுப்பு/தரம் | நியமனஞ் செய்யப்பட்ட பதவி/அலுவலகம்/ நடைமுறைப்படுத்தப்படும் திகதி |
|---|---|---|
| 10 | திரு. எச். எம். பி. ஹேரத் இலங்கை நிருவாக சேவை வகுப்பு (I) | 2010.03.26 ஆந் திகதிய கடிதத்திற்கு இணங்க உடனடியாக செயற்படும் வண்ணம் வடமேல் மாகாண, பிரதம செயலாளர் அலுவலகத்தின் பிரதிப் பிரதம செயலாளர் (நிதி முகாமைத்துவம்) பதவியில் கடமை புரிவதற்கு |
| 11 | திரு. அயந்த தல்கொடபிட்டிய இலங்கை கணக்காளர் சேவை வகுப்பு (I) (விசேட வகுப்பு) | 2010.04.22 ஆந் திகதிய கடிதத்திற்கு இணங்க உடனடியாக செயற்படும் வண்ணம் வடமேல் மாகாண கல்வி திணைக் களத்தின் பிரதம கணக்காளர் பதவியில் கடமை புரிவதற்கு |
| 12 | திரு. எம். எம். கே. வெவகெதர இலங்கை கணக்காளர் சேவை வகுப்பு II/ I | 2010.04.22 ஆந் திகதிய கடிதத்திற்கு இணங்க உடனடியாக செயற்படும் வண்ணம் வடமேல் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தின் கணக்காளர் பதவியில் கடமை புரிவதற்கு |

கௌரவ ஆளுநர் அவர்களது கட்டளைக்கிணங்க,

ஆர். ஏ. திலக்கரத்ன,
வடமேல் மாகாண ஆளுநரது செயலாளர்.

வடமேல் மாகாண ஆளுநர் அலுவலகம்,
2010, யூன்.

7-359

---

# மாகாண சபை அறிவித்தல்கள்

## 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனம் (ஏற்றுக்கொள்ளப்பட்ட இடைநிலைச் சட்டம்) சட்டம்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்திட்டம்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனம் (இடைநிலைச் சட்டம்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சராகிய என்னால் அமைக்கப்பட்டு இங்கு கீழ் காணப்படும் பிரதி இடைநிலைச் சட்டத்தை இத்துடன் பிரசித்தப்படுத்துகின்றேன்.

அதன் பிரதி இடைநிலைச் சட்டங்களில் உள்ளடக்கப்பட்ட சட்டத்திட்டங்கள் உள்ளடக்கப்பட்ட இடைநிலைச் சட்டத்தை அமைப்பதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 126 ஆம் பிரிவின் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அந்த இடைநிலைச் சட்டம் மேற்கூறப்பட்ட உள்ளூராட்சி நிறுவன (ஏற்றுக்கொள்ளப்பட்ட இடைநிலைச் சட்டம்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் சட்ட திட்டங்களுக்கு உடன்பட்டு ஏற்றுக்கொள்வதற்கு பிரதேச சபைகளுக்கு இத்துடன் அதிகாரம் வழங்கப்படுகின்றது.

அதுல சரத் குமார விஜேசிங்ஹ,
முதலமைச்சரும்,
நிதியும் திட்டமிடலும், நீதியும் சமாதானமும்,
உள்ளூராட்சியும் மாகாண நிருவாகமும் மனித வள,
கல்வியும் கலாச்சார நடவடிக்கை, காணி, போக்குவரத்து,
சூழல், சுற்றுலா, முதலீட்டு நடவடிக்கை, கூட்டுறவு
அபிவிருத்தியும் உணவு வழங்கலும் விநியோக அமைச்சரும்.
(வடமேல் மாகாண மாகாண சபை).

குருநாகல்,
2010.

7-524/1

## தீங்கு விளைவிப்பவை, அபாயகரமானவை மற்றும் தீங்கு விளைவிப்பவையும் அபாயகரமானவையுமான தொழில்கள் பற்றிய இடைநிலைச்சட்டம்

இங்கு தீங்கு விளைவிப்பவை, அபாயகரமானவை மற்றும் தீங்கு விளைவிப்பவையும் அபாயகரமானதுமான தொழில்கள் பற்றி சபையின் குறிக்கோள்கள் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள இந்த இடைநிலைச் சட்டத்தின் முதலாவது உப அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் தொழில் என்று பொருள்படும்.

2. மேற்கூறப்பட்ட முதலாவது இடைநிலைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரம் முறைப்படுத்தல் மேற்பார்வை செய்தல் நிர்வகித்தல் போன்றவற்றிற்காக இடைநிலைச் சட்டம் விதிக்கப்படுகின்றது.

3. தவிசாளரினால் இந்த சேவைக்காக வெளியிடப்பட்ட அதிகாரப்பத்திரம் உரிமையுடையவராயின் அன்றி எந்த ஆளொருவரும் பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் தீங்குவிளைவிக்கும் வியாபாரம் அல்லது அபாயகரமான வியாபாரம் அல்லது தீங்குவிளைவிக்கும் மற்றும் அபாயகரமான வியாபாரத்தை கொண்டு நடாத்தலாகாது.

4. (i) வியாபாரத்தை நடாத்திச் செல்கின்ற சூழல், பிரதேசத்தின் சுகாதார வைத்திய உத்தியோகத்தரின் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் அதற்காக தகுதி உண்டு என்று அனுமதிகப்பட்டிருப்பின் அன்றி, மற்றும்

(ii) அந்த சூழல் மற்றும் அந்த வியாபாரத்தின் அலுவலுக்காக உபயோகத்திற்கு எடுக்கப்படுகின்ற எந்தவொரு கட்டிடம் இருப்பின் அந்த கட்டிடம், கீழ்க் காணப்படும் ஒப்பந்தங்களுக்கு உடன்படுமாயின் அன்றி, எவரொருவர் தீங்கு விளைவிக்கும் அல்லது அபாயகரமான வியாபாரம் அல்லது தீங்குவிளைவிக்கும், அபாயகரமான வியாபாரம் நடாத்திச் செல்வதற்காக அதிகாரப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு உரிமையற்று போகின்றது :-

(அ) சூழலை உரிய முறையில் நடாத்திச் செல்வதற்கு கொண்டு நடாத்த வேண்டியதுடன், நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் கிடைக்கும் வண்ணம் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். எல்லா அறைகளும், திறக்கின்ற போது வீட்டின் அளவில் பதினைந்தில் ஒரு பங்கிற்கு குறையாத அளவில் யன்னல் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) எல்லா அறைகளிலும் சுவர்களில் எல்லா பகுதிகளினதும் உயரம் 2.14 இற்கு குறையாது இருத்தல் வேண்டியதுடன், செங்கல், கருங்கல், கபொக் அல்லது சீமெந்து கற்களினால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் சுவர்களின் உட்புர பக்கங்கள் குறைந்த பட்சம் வீட்டு அடிவாரத்தில் இருந்து 2 மீட்டர் உயரத்திற்கு சீமெந்து கலவை பூசப்பட்டிருத்தல் வேண்டியதுடன், மேலதிக பகுதி சுண்ணாம்பு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) எல்லாப் பக்கங்களின் முடிவிலும் வீட்டு தளத்தில் இருந்து மீட்டர் 2 இற்கு அதிகமான உயரத்தில் இருத்தல் வேண்டும்.

(ஈ) கூரையை ஏதாவதொரு உறுதியான பொருளினால் கட்டமைத்தல் வேண்டும்.

(உ) மரத்திலான எல்லாவற்றையும் எண்ணெய் வர்ணம் (தீட்டப்பட்டு) அல்லது மரத்திற்கான வர்ணம் தீட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஊ) பூரண வீட்டு மனை சீமெந்தினால் அல்லது நீர் கசிவு ஏற்படாத பொருளினால் கட்டமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(எ) சூழல் போதுமான அளவில் நீர் வழிந்தோடக்கூடிய வகையில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஏ) சூழலில் சுகாதார முறையில் கழிவுப்பொருட்களை அகற்றல் மற்றும் மலசலகூட வசதி அளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஐ) சூழலில் கட்டிடத்தினுள் மின்சார வசதி சம்பந்தமாக மின்சார அதிகார சபையாளருக்கு அல்லது அது பற்றி தொழில் பயிற்சியை பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் அல்லது தவிசாளர் அதிகாரம் அளிக்கப்படுகின்ற உத்தியோகத்தரினால் அனுமதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. இந்த துணைவிதியின் 3 ஆம் பந்தியின் கீழ் வெளியிடப்பட்ட அதிகாரப் பத்திரம் உரிய வருடத்தில் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் முடிவடைதல் வேண்டும். என்றாலும் இந்த இடைநிலைச் சட்டத்தின்கீழ் வியாபாரத்தை நடாத்திச் செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு உடன்படிக்கை அத்துமீறுவதாயின் அதிகாரப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு தலைவருக்கு அதிகாரம் உண்டு. இந்த அதிகாரத்தை உபயோகிப்பதற்கு முன் உரிய அதிகாரபத்திர உரிமையாளருக்கு அந்த காரணத்தை விளக்குவதற்கு போதுமான அளவு நிலவரத்தை அளித்தல் வேண்டும்.

6. (i) எல்லா அதிகாரப்பத்திர உரிமையாளரும் வியாபாரத்தை கொண்டு நடாத்துவதற்காக தேவையான பொருட்கள் நாற்றம் ஏற்படாமல் அல்லது வேறு முறையில் விளைவுகளை ஏற்படுத்தாமல் களஞ்சியப்படுத்தல் வேண்டும்.

(ii) பீடனை ஏற்படுவதும் அல்லது நாற்றம் ஏற்படுத்தும் பொருட்கள் பொது இடங்களில் அல்லது ஒழுங்கைகளில் எடுத்துச் செல்லும்போது எவ்வித அபாயமும் ஏற்படாத வண்ணம் நன்றாக சுற்றப்பட்ட உறிஞ்சப்படாத பாத்திரங்களில் போடப்பட்டு எடுத்துச் செல்லல் வேண்டும்.

(iii) ஏதாவதொரு உற்பத்தியின்போது வெளியேற்றப்படும் பீடனைக்குரிய அல்லது வாயு வெளியேற்றப்பட்டு அழிவை ஏற்படுத்தாமலும் பீடனைக்குரிய பெறுபேற்றை ஏற்படுத்தாமலும் வாயு மண்டலத்திற்கு விடுவித்தல் வேண்டும். அல்லாவிடின் நெருப்பு அல்லது வெளியேற்றப்படும் கனரக பொருட்களின் மூலம் வெளியேற்றுவதற்கு வழிவகுத்தல் வேண்டும்.

(iv) தங்களின் வியாபாரத்தை கொண்டு நடாத்திச் செல்லும் சூழலில் முறையாக வடிகால் அமைப்பை நடாத்திச் செல்வதுடன், அவற்றை தினமும் கழுவுதல் வேண்டும்.

(v) தங்களின் வியாபாரத்தை நடாத்திச் செல்லும் சூழலின் தளத்தில் நீர் வழிந்தோடக்கூடியதான பொருட்களினால் அமைக்கப்பட வேண்டியதுடன், அவற்றை நல்லமுறையில் கொண்டு நடாத்துவதுடன் சுத்தமாக வைத்திருத்தலும் வேண்டும்.

(vi) வியாபாரத்தை கொண்டு நடாத்தப்படும் கட்டிடங்களின் சுவர்களில் சுத்தமற்ற பொருட்கள் உறிஞ்சிக்கொள்ளாமல் பாதுகாப்பாக வைத்திருப்பதுடன், வருடாந்தம் அவற்றில் வர்ணம் தீட்டல் வேண்டும்.

(vii) வியாபார நிலையத்தில் உபயோகப்படுத்தப்படும் பொருட்கள் அனைத்தும் சுத்தமாக வைத்திருத்தலுடன் தினமும் சுத்தப்படுத்தல் வேண்டும்.

(viii) வியாபாரத்தை நடாத்திச் செல்லப்படும் சூழலில் உள்ள கழிவுப் பொருட்களை ஒன்று சேர்த்து மேலதிக பொருட்களும் இடைநிலை உற்பத்தி ஆகியன மென்மேலும் வியாபார நடவடிக்கைகளுக்கு உடனடியாக உபயோகிப்பதாயின் அன்றி மூடப்பட பாத்திரங்களில் போட்டு தினமும் வெளியேற்றல் வேண்டும்.

(ix) தோல் அல்லது வேறு பொருட்களினால் கழுவுதல் அல்லது இழகச்செய்வதற்கு பயன்படுத்தப்படும் நீர் தொட்டிகளை, கழிவு நீரைத் தடுப்பதற்காக தேவையான வகையில் வெற்றுப்படுத்தி சுத்தம் செய்தல் வேண்டும்.

(x) ஏதாவதொரு ஆற்றினுள், நீரோடையினுள், கால்வாயினுள், வாய்க்காலினுள், கிணற்றினுள், நீர்த்தொட்டியினுள் அல்லது ஏதேனும் திறந்த நீர் பகுதியினுள் ஏதேனும் கெடுமதியான, துர்நாற்றம் அல்லது தீங்கு விளைவிக்கும் நீரை அல்லது வேறு திரவத்தை செலுத்துகின்றதன் மூலம் அல்லது வடியவிடுவதன் மூலம் அல்லது ஏதேனும் தீங்கு விளைவிக்கும் பதார்த்தத்தை அதனுள் எறிவதன் மூலம் அல்லது கழுவி விடுவதன் மூலம் அதனை மாசுப்படுத்தலாகாது அல்லது அத்தகைய ஆற்றை, நீரோடையை, கால்வாயை, வாய்க்காலை, கிணற்றை, நீர்த்தொட்டியை அல்லது திறந்த நீர்பகுதியை வேறு வகையில் மாசுப்படுத்தல் அல்லது அசுத்தமாக்குதலாகாது.

7. தவிசாளரினால் அல்லது அந்த தொழிலுக்காக அவரினால் சாதாரணமாக அல்லத விசேடமாக அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதேச சபையின் ஏதாவதொரு உத்தியோகத்தரினால் எல்லா சாதாரண நேரத்தினுள் தீங்குவிளைவிப்பவை, அபாயகரமானவை மற்றும் தீங்கு விளைவிப்பவையும் அபாயகரமானதுமான தொழில்களை செய்து கொண்டு செல்லும் சூழலுக்கு உட்பிரவேசித்து பரிசோதித்தல் சட்டமாகும். இன்னும் அதிகாரப் பத்திரமுடையவர் அல்லது அங்கு நிருவாகத்திற்கு பொறுப்புடையோர் இவ்வாறான பரிசோதனைக்கு இடமளித்தல் வேண்டும்.

8. அதிகாரப் பத்திரம் பெற்ற சூழல், இந்த இடைநிலைச்சட்டத்தில் உள்ள சட்டத்திட்டங்களுக்கு பரிசோதனையின் போது முறையற்றது என்று தெரியவரும் போது, உரிய சூழல் இந்த இடைநிலச்சட்டத்திட்டத்திற்கு உரியவகையில் நடாத்துவதற்காக உரிய காலத்தினுள் செய்யும்படி உரியவருக்கு எழுத்துமூலம் அறிவிப்பதற்கு தவிசாளருக்கு அதிகாரம் உண்டு. இன்னும், அந்த அறிவித்தல் கிடைக்கப்பெற்றவுடன் அதனை உரியவரினால் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

9. பிரதேச சபையினால் உறுதிப்படுத்தப்பட்ட தீங்கு விளைவிக்கும் வியாபாரம், அபாயகரமான வியாபாரம் தீங்கு விளைவிக்கும் அபாயகரமான வியாபாரம் முறையாக இலக்கம் (i), (ii), (iii) ஆம் உப அட்டவணைகளில் உட்படுத்தப்பட்டுள்ளது.

10. இந்த இடைநிலைச்சட்டத்தின் கீழ் ஏதாவதொரு வியாபாரத்தை நடாத்திச் செல்வதற்காக அதிகாரப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக எவர் ஒருவரினால் முன்வைக்கப்படும் விண்ணப்பப்படிவம் தனக்கு கிடைத்து 30 தினங்களுக்குள் சூழல் இந்த இடைநிலைச்சட்டத்திற்கு முறையாகுமாயின் அதிகாரப்பத்திரம் பெற்றுக்கொடுத்தல் அல்லது தள்ளுபடி செய்வதாயின் காரணம் சொல்லப்பட்டு அது பற்றி விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் தவிசாளரின் கடமையாகும்.

11. இந்த இடைநிலைச்சட்டத்தை அத்துமீறுதல் பற்றி பிரதேச சபை சட்டத்தின் 122 (2) பிரிவின்கீழ் நடவடிக்கை எடுத்தல் சட்டமாகும்.

12. வாக்கியம் சம்பந்தமாக அர்த்தம் தேவைப்படின்,

'ஒருவர்' என்பது கூட்டமைக்கப்பட்ட அல்லது கூட்டமைக்கப்படாத தனியார் சபையாகும்.

'நிருவாகப் பொறுப்புள்ள ஒருவர்' என்பது ஏதாவதொரு பொறுப்பாளர், பாதுகாவலர், சொத்து பாதுகாவலர், முகாமையாளர் அல்லது எவர் ஒருவருக்காக ஏதாவதொரு வியாபாரத்தின் கூட்டமைப்பு, நிருவாகம் அல்லது முகாமைத்துவத்தை அளிக்கப்பட்டுள்ள வேறு ஒருவர்.

'அதிகாரமுடையவர்' என்பது இந்த இடைநிலைச்சட்டத்தின் கீழ் வியாபாரத்தை கொண்டு நடாத்திச் செல்வதற்காக அதிகாரப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள எவர் ஒருவர்.

'தவிசாளர்' என்பது உரிய பிரதேச சபையின் தவிசாளர் என்று கருதப்படும்.

## I ஆம் அட்டவணை - தீங்கு விளைவிக்கும் வியாபாரம்

1. மின்னரம் சுத்தப்படுத்தல் அல்லது களஞ்சியப்படுத்தல்.
2. பசளை அல்லது இரசாயன பசளை உற்பத்தி செய்தல் அல்லது விற்பனைக்கு வைத்திருத்தல்.
3. தோல் பதனிடல்.
4. தோல் விற்பனைக்கு வைத்திருத்தல்.
5. மிருக பரிபாலனம் (இறைச்சி, பால் அல்லது முட்டைக்காக)
6. மாசி உற்பத்தி செய்தல்.
7. இறப்பர் உற்பத்தி செய்தல் அல்லது இறப்பர் ரொட்டி வைத்திருத்தல்.
8. மிருக வைத்திய நிலையத்தை நடாத்திச் செல்லல்.
9. தொகையாக விற்பனை செய்வதற்காக விரைவாக அழுகிச்செல்லும் சாப்பாடு வகைகள் அல்லது இனிப்பு பண்டங்களை வைத்திருத்தல்.
10. கருவாடு, உப்பு மீன் அல்லது மீன் டின் 150 கிலோ கிராம் இற்கு அதிகளவில் வைத்திருத்தல்.
11. மீன் அல்லது இறைச்சி டின் செய்தல் அல்லது காய்ச்சுதல் அல்லது ஐஸ் போடல்.
12. சிரட்டைக் கரி அல்லது மரக் கரி உற்பத்தி.
13. புகையிலை பதனிடல்.
14. மிருக உணவு உற்பத்தி செய்தல்.
15. பிண்ணாக்கு உற்பத்தி செய்தல்.
16. மிருக இறைச்சி.
17. சவர்க்காரம் உற்பத்தி செய்தல்.
18. மிருக முள்ளை அரைத்தல் அல்லது வைத்திருத்தல்.
19. டிரன்க் பெட்டி உற்பத்தி செய்தல்.
20. புதிய உலோகம் அல்லது பழைய உலோகம் வைத்திருத்தல்.
21. உடைந்த உலோகங்களை வைத்திருத்தல்.
22. வீட்டு உபகரணங்களை உற்பத்தி செய்தல்.
23. பிரம்பு பொருட்களை உற்பத்தி செய்தல்.
24. தளபாட தொழிற்சாலையை நடாத்திச் செல்லல்.
25. சிரப் அல்லது பழச்சாறு உற்பத்தி செய்தல்.
26. இனிப்பு பண்டம் உற்பத்தி செய்தல்.
27. தேங்காய் தும்பு இழுகச் செய்தல்.
28. தூரிகை வகைகளை உற்பத்தி செய்தல் (பல் தூரிகை)
29. பல் தூரிகை உற்பத்தி செய்தல்.
30. கள் வடித்தல்.
31. வினாகிரி உற்பத்தி செய்தல்.
32. மரம் கிளித்தல்.
33. பட வர்ணம், வார்னிஸ் அல்லது டிஸ்டெம்பர் உற்பத்தி செய்தல்.
34. சோடா உற்பத்தி செய்தல்.
35. நூல் சாயமிடல்.
36. தோல் பொருட்கள் உற்பத்தி.
37. பழங்கள், மீன் அல்லது வேறு உணவு வகை அடைத்தல்.
38. கோப்பி, தானியம், மா பதப்படுத்தல்.
39. பேகின் பவுடர் உற்பத்தி செய்தல்.
40. கேஸ் மென்டல் உற்பத்தி செய்தல்.
41. பூச்சாடி உற்பத்தி செய்தல்.
42. மெழுகுவர்த்தி உற்பத்தி செய்தல்.
43. கபுரு உற்பத்தி செய்தல்.
44. எழுதும் மை, அச்சு மை அல்லது ஸ்டென்சில் மை உற்பத்தி செய்தல்.
45. துணி துவைக்கும் நீலம் உற்பத்தி செய்தல்.
46. லாக்கர் உற்பத்தி செய்தல்.
47. வாசனைத் திரவியம் உற்பத்தி செய்தல்.
48. பாடசாலை வெண்கட்டி உற்பத்தி செய்தல்.
49. டயர் அல்லது டியுப் உற்பத்தி செய்தல்.
50. டயர் மீள் நிரப்புதல்.
51. டயர் டியுப் வொல்கனைசிங் செய்தல்.
52. சீமெந்து உற்பத்தி செய்தல்.
53. சீமெந்து பொருட்கள் அல்லது எஸ்பெஸ்ரொஸ் சீமெந்துப் பொருட்கள் உற்பத்தி செய்தல்.
54. மண் கடதாசி உற்பத்தி செய்தல்.
55. பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்தல்.
56. செங்கல் சுடல்.

57. இயந்திர உதவியுடன் துணி உற்பத்தி செய்தல்.
58. அமில உற்பத்தி செய்தல் அல்லது மீண்டும் விரிவுபடுத்தல்.
59. ஓடு உற்பத்தி செய்தல்.
60. பசளை, சுண்ணாம்பு அல்லது வேறு பொருட்கள் இடப்பட்டு சாக்குகளை துப்பரவு செய்து விற்றல்.
61. இயந்திர உதவியுடன் சீமெந்து புளொக் கல் உற்பத்தி செய்தல்.

### II ஆம் அட்டவணை - அபாயகரமான வியாபாரம்

1. கருங்கல் தோண்டல் அல்லது உடைத்தல்.
2. மரக்கறி எண்ணெய் உற்பத்தி செய்தல்.
3. தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்தல்.
4. நெருப்பெட்டி உற்பத்தி அல்லது களஞ்சியப்படுத்தல்.
5. மெதிலேடட் ஸ்பிரிட் உற்பத்தி செய்தல்.
6. தேயிலைப் பெட்டி உற்பத்தி செய்தல்.
7. தும்பு அல்லது வேறு தும்பு வகைகளை உற்பத்தி செய்தல்.
8. தும்பு அல்லது வேறு தும்பு வகைகளினால் பொருட்கள் உற்பத்தி செய்தல்.
9. வைக்கோல் வைத்திருத்தல்.
10. உபயோகிக்கப்பட்ட துணிகளை களஞ்சியப்படுத்தல்.
11. நகைகளை உற்பத்தி செய்தல் அல்லது புனரமைத்தல்.
12. இயந்திர உதவியுடன் மரம் வெட்டல்.
13. சுண்ணாம்பு கல் தோண்டல்.
14. இயந்திர உபகரணம் உபயோகப்படுத்தப்படும் தொழிற்சாலையை நடாத்தல்.
15. வெற்று சாக்கு அல்லது வெற்று போத்தல் வைத்திருத்தல்.
16. மிதிவண்டி அல்லது மோட்டார் சைக்கிள் புனரமைத்தல்.
17. உபயோகப்படுத்தப்பட்ட கடதாசி அல்லது பத்திரிகை வைத்திருத்தல்.
18. பரவலாக வண்ணம் தீட்டல்.
19. நெருப்பு விளையாட்டு பொருட்கள் ரதிஞ்ஞா களஞ்சியப்படுத்தல்.
20. உலோக புனரமைப்பு தொழிற்சாலை (இயந்திர உபகரணம், ஆயுதம் உபகரணம் உற்பத்தி).

### III ஆம் அட்டவணை - அபாயகரமானதும் தீங்கு விளைவிக்கும் வியாபாரம்

1. காக்காய்ப்பொன் சுத்தம் செய்தல்.
2. இரசாயன திரவம் உபயோகித்து ஏலக்காய் கருவா போன்ற வர்க்கங்களை சரிசெய்தல்.
3. பிரைக்கிலின் செய்தல் அல்லது சாயமிடல்.
4. துணி அச்சிடல் அல்லது சாயமிடல்.
5. மின்பிரி முறையினால் பூச்சுமானம் செய்தல்.
6. எண்ணெய் அல்லது மிருக கொழுப்பு உற்பத்தி செய்தல்.
7. சுண்ணாம்பு கல் அல்லது திருவணாக்கல் சுடல்.
8. நெருப்பு விளையாட்டு பொருட்கள் அல்லது வெடில் உற்பத்தி செய்தல்.
9. மீன் எண்ணெய் உற்பத்தி செய்தல்.
10. வள்ளம் அமைத்தல்.
11. படரி மின்சக்தி உட்படுத்தல் அல்லது புனரமைத்தல்.
12. உலோக வர்க்கங்கள் சூடாக்கல்.
13. மோட்டார் வாகனம் புனரமைத்தல்.
14. மோட்டார் வாகனம் சேவை செய்தல்.
15. இயந்திர உதவியுடன் உலோகம் தூளாக்கல்.
16. அச்சில் வார்த்தல் நிலையத்தை நடாத்திச் செல்லல்.
17. தகடு வேலைத்தளத்தை நடாத்திச் செல்லல்.
18. மோட்டார் வாகனம் போட் அமைத்தல்.
19. பூச்சிக் கொள்ளி, மர பூச்சிக் கொள்ளி, பூச்சாணம் கொள்ளி கிருமிநாசினி உற்பத்தி.
20. விஷக்கிருமிக் கொள்ளி உற்பத்தி.
21. நுளம்புக் கொள்ளி உற்பத்தி செய்தல்.

## கொண்டு திரிந்து விற்போர் சம்பந்தமான இடைநிலைச் சட்டம்

இந்த இடைநிலைச்சட்டம் பிரதேச சபை அதிகாரப்பிரிவினுள் கொண்டு திரிந்து செய்யப்படும் விற்பனையை முறைப்படுத்தல், நிருவகித்தல் மற்றும் பரிபாலித்தலுக்காக விதிக்கப்படுகின்றது.

2. இந்த இடைநிலைச்சட்டப்படி பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் வெளியிடப்படும் கொண்டு திரிந்து விற்கும் வியாபார அதிகார பத்திரம் மற்றும் ஆளடையாள அட்டை இருக்குமாயின் மாத்திரம் பிரதேச சபை அதிகார பிரிவிற்குள் கொண்டு திரிந்து விற்பனை செய்யும் வியாபாரியாக ஈடுபடலாம்.

3. இந்த இரண்டாம் இடைநிலைச்சட்டத்தில் கூறப்பட்ட கொண்டு திரிந்து விற்போருக்கான அதிகாரப்பத்திரம் இலக்கம் 02 உப அட்டவணைக்கு ஒத்ததாக இருப்பதுடன் அதற்காக இலக்கம் 01 உப அட்டவணையில் உள்ளவாறு விண்ணப்பப்படிவம் முன்வைத்தல் வேண்டும்.

4. (1) மேற்கூறப்பட்ட 2 ஆம் இடைநிலைச்சட்டப்படி பெற்றுக்கொள்ளப்படும் எல்லா அதிகாரப்பத்திரமும் முன் இரத்துச் செய்யப்பட்டதாயின் அன்றி பெற்றுக்கொள்ளப்பட்ட வருடத்தில் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை அதிகாரம் உள்ளதாகும். இவ்வாறு வெளியிடப்படும் அதிகாரப்பத்திரம் இந்த இடைநிலைச்சட்டத்தை மீறுவதை கொண்டு எந்த நிலையிலும் இரத்து செய்யும் அதிகாரம் மற்றும் மீண்டும் அதிகாரப்பத்திரம் வெளியிடும் அதிகாரம் அதிகாரியினதாகும்.

(2) ஓரளவான காலத்திற்குள் வெளியிடப்படுகின்ற தற்காலிக அதிகாரப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லையிற்காக மாத்திரம் உரியதாகும்.

5. எந்த காரணத்திற்காக அல்லது மேற்கூறப்பட்ட 2 ஆம் இடைநிலைச்சட்டப்படி பெற்றுக்கொள்ளப்படும் அதிகாரப்பத்திரம் மற்றும் ஆளடையாளப்பத்திரம் கையொப்பமிடல் ஆகாது.

6. எல்லா கொண்டு திரிந்து விற்கும் வியாபாரியும் வியாபாரத்தில் ஈடுபடுகின்ற நேரத்தில் தவிசாளரினால் வெளியிடப்பட்டுள்ள ஆளடையாளட்டையை தெளிவாக தெரியும் வண்ணம் அணிந்திருத்தல் வேண்டும்.

7. வெளியிடப்படுகின்ற எல்லா அதிகாரப்பத்திரத்திற்கும் தகுதி என்று கருதுமிடத்து ஒப்பந்தம் உற்படுத்துவதற்கு தவிசாளருக்கு அதிகாரம் உண்டு.

8. இந்த இடைநிலைச்சட்டத்தின் கீழ் அதிகாரப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக சபையினால் காலத்திற்கு காலம் முன்மொழிதலினால் குறித்துரைக்கப்படும் கட்டண அளவு செலுத்தப்படல் வேண்டும்.

9. அதிகாரப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லா கொண்டு திரிந்து விற்கும் விற்பனையாளர்களும் கொண்டு திரிந்து செய்யப்படும் விற்பனை நடவடிக்கை மு. ப. 6.00 தொடக்கம் பி. ப. 10.00 வரையிலான காலப்பகுதியினுள் இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் விஷேட விழாக்காலங்களில் இந்த கால எல்லை தவிசாளரினால் தவிர்க்கப்படுவதற்கான இடமுண்டு.

10. எந்த அதிகார பத்திர உரிமையாளரும் அல்லது அவரின் முகவர் வியாபார காலத்தினுள் வெளியில் கொண்டு திரிந்து விற்கும் கூடத்தினுள் அல்லது அண்மையில் தரித்திருத்தல் கூடாது.

11. கொண்டு திரிந்து வியாபார கூடம் உபயோகப்படுத்துவதாயின் அவ்வாறான வியாபார கூடத்தினுள் அல்லது அவற்றிற்கருகில் எவ்விதத்திலும் உணவு சமைத்தல் அல்லது பரிமாறல் செய்யக் கூடாது.

12. கொண்டு திரிந்து செய்யும் வியாபாரத்தின் போது உணவு பண்டங்கள் விற்பனை செய்வதாயின் எல்லா உணவு பண்டங்களையும் சுகாதார முறைப்படி பாதுகாப்பாக மூடிவைத்து விற்பனை செய்தல் வேண்டியதுடன் உணவு பரிமாறுவதற்காக முறையாக கரண்டிகளை உபயோகித்தல் வேண்டும். அதுபோன்று உணவு சட்டத்திட்டத்திற்கு ஒத்ததாக உரிய வியாபாரத்தை செய்தல் வேண்டும்.

13. மிருகங்களை வெட்டும் சட்டத்தில் உள்ள மிருகங்களின் இறைச்சி விற்பனை செய்தல் ஆகாது.

14. அதிகாரப்பத்திர உரிமையாளர் பரவுகின்ற நோயினால் பீடிக்கப்பட்டிருப்பின் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதை விட்டும் விலகி இருப்பதுடன், அதற்காக பரவுகின்ற நோயினால் பீடிக்கப்பட்ட ஒருவரை ஈடுபடுத்தலாகாது.

15. கொண்டு திரிந்து விற்கும் விற்பனையாளரினால் ஏதாவதொரு பரவுகின்ற நோய் பரவிக்கொண்டு இருக்கும் அல்லது பரவி இருக்கும் பிரதேசத்தில் சமைக்கப்படும் உணவு வகைகள் வேறு பொருட்கள் விற்பனை செய்வதை தவிசாளரினால் தடைசெய்தல் வேண்டும்.

16. கழிவுப் பொருட்கள் அல்லது அசுத்த நீர் பொது இடங்களில் போடக்கூடாததுடன், அதற்காக தவிசாளர் திருப்தியடையும் வகையில் உரிய சட்டதிட்டம் எடுத்தல் வேண்டும்.

17. கொண்டு திரிந்து விற்கும் வியாபாரத்தின் போது பொது மக்களினால் வெளியிடப்படும் கழிவுப்பொருட்கள், கழிவு நீர்

வெளியேற்றுவதற்காக சபையின் ஒருமைப்பாட்டுடன் முறையான வேலைத்திட்டத்தை கொண்டு திரிந்து விற்கும் வியாபாரியினால் முறைப்படுத்தல் வேண்டும்.

18. பிரதேச சபையின் அதிகாரமுள்ள அதிகாரியினால் கேட்கும் விடத்து உரியவரின் அதிகாரப்பத்திரத்தையும் ஆளடையாளட்டையையும் முன்வைத்தல் வேண்டும்.

19. பொது வியாபார சூழலினுள் கொண்டு திரிந்து விற்கும் வியாபாரம் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏதாவதொரு இடத்தில் நீண்ட நேரம் தரித்திருந்து வியாபாரம் செய்தல் ஆகாது.

20. உரிய நீதிமன்றத்தினால் அதிகார பத்திரத்தை இல்லாதொழிக்கப்படுமிடத்து உரிய அதிகாரப்பத்திரத்தை உடனடியாக தவிசாளரிடத்தில் திருப்பி ஒப்படைத்தல் வேண்டும்.

21. கொண்டு திரிந்து விற்பனை அதிகாரப்பத்திரத்தையும் சபையினால் வெளியிடப்படும் ஆளடையாளட்டை இல்லாதவிடத்து அல்லது இந்த துணை விதியை மீறும் நிலை சம்பந்தமாக பிரதேச சபை சட்டத்தின் 122 (2) ஆம் பிரிவின்கீழ் நடவடிக்கை எடுத்தல் சட்டமாகும்.

இங்கு வாக்கியம் சம்பந்தமாக அர்த்தம் வேண்டியவிடத்து,

'அதிகாரம் உள்ள அதிகாரி' என்பது பிரதேச சபையின் தவிசாளரினால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

'கொண்டு திரிந்து விற்கும் வியாபாரம்' என்பது சபை அதிகாரப்பிரிவினுள் திரிந்து அல்லது மிதி வண்டியில், மோட்டார் வண்டியில், மாட்டு வண்டியில், சில்லு பொறுத்தப்பட்ட வியாபார கூடத்தினால் அல்லது மிருகத்தின் உதவியுடன் செய்யப்படும் வியாபாரம்.

'சபை' என்பது உரிய பிரதேச சபை.

'தவிசாளர்' என்பது உரிய பிரதேச சபையின் தவிசாளர் என்று கருதப்படும்.

### கொண்டு திரிந்து செய்யப்படும் விற்பனைக்கான அனுமதிப்பத்திரம்

எல்லையினுள் கீழ் காணப்படும் உடன்படிக்கைகளை செய்வதற்கு உடன்பட்டு கீழ் காணப்படும் விபரம் அடங்கிய கொண்டு திரிந்து விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு இந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் :-

1. முழுப்பெயர் :----.
2. முகவரி :----.
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
4. செய்யப்படும் வியாபாரம் :----.
5. வியாபாரம் செய்யும் எல்லை :----.
6. செலுத்தும் தொகை : ----. திகதி :----. பற்றுச்சீட்டு இலக்கம் :----.
7. அதிகாரப்பத்திரத்தின் இலக்கம் :----.

**உடன்படிக்கை**

1. சீருடை அணிதல்.
2. பொது மக்களின் பார்வைக்கு உள்ளவாறு ஆளடையாள அட்டையை அணிதல்.
3. மதுபானம், புகைத்தல் ஆகியவற்றில் இருந்து விலகியிருத்தல்.
4. உள் செல்லும் வழியில் மற்றும் மிதிபலகைகளில் வியாபாரம் செய்யாதிருத்தல்.
5. ஒழுக்கமாகவும் ஒழுக்காற்றலுடனும் ஈடுபடல்.
6. பொது மக்களினால் போடப்படும் கழிவுப்பொருட்களை உரிய இடத்தில் போடல்.
7. மாதாந்த கட்டணம் 10 தினங்களுக்கு முன் செலுத்தல்.
8. விற்பனை பொருட்களாகிய கத்தி போன்ற ஆயுதங்கள் பொது மக்களின் காட்சிக்கு வைத்தல் கூடாது. (மேற்கூறப்பட்ட உடன்படிக்கையை மீறும் அல்லது உரிய காலத்தினுள் பணம் செலுத்தாதிருத்தல் அனுமதிப்பத்திரத்தை தடை செய்வதற்கு காரணமாக இருக்கும்.)

**1 ஆம் அட்டவணை**

***கொண்டுதிரிந்து விற்கும் வியாபாரியாக பதிவு செய்யப்படும் விண்ணப்பப்படிவம்***

1. முழுப்பெயர் :----.
2. முகவரி :----.
3. தேசிய அடையாளட்டை இலக்கம் :----.
4. செய்யப்படும் வியாபாரம் :----.
5. வியாபாரம் செய்யும் எல்லை :----.
6. பழைய வியாபார ஆளடையாளட்டை/அனுமதிப்பத்திர இலக்கம் :----.
7. நகர எல்லைக்குள் நிரந்தர கடைகளின் உரிமை இருப்பின் கடையின் இலக்கமும் வரிபண இலக்கம் :----.

மேற்கூறப்பட்ட தகவல் உண்மையானது என்று உறுதிப்படுத்துவதுடன் பிரதேச சபை/நகர சபையினால் விற்பதற்கு அனுமதி வழங்கப்படாத பொருட்கள் விற்பனை செய்வதில்லை என்றும் பிரதேச சபை/நகர சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கொண்டு திரிந்து விற்பனை செய்யும் வியாபாரியினால் பதிவு செய்யும் அனுமதி, உரிமை உண்டு என்று கருதப்படவில்லை என்றும் உடன்படுதலுக்கு கீழ் கொண்டு திரிந்து விற்பனை செய்யும் வியாபாரியாக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

7-524/3

---

**பிரதேச சபை எல்லையினுள் வாகனம் தரித்திருத்தல்**

1. இந்த துணை விதி பிரதேச சபை அதிகாரப்பிரிவினுள் வாகனம் தரித்திருக்கும் பொது இடங்களை ஏற்படுத்தலும் அந்த இடங்களில் வாகனங்களில் வாகனம் தரித்தல். முறைப்படுத்தல், நிர்வகித்தல் மற்றும் பரிபாலித்தல் பற்றியது துணை விதி என்று அறிமுகப்படுத்தப்படும்.

2. (1) இங்கு இதன் பிறகு தவிசாளர் என்று அறிமுகப்படுத்தப்படும் பிரதேச சபையின் தவிசாளரினால் தமது அதிகாரப்பிரிவிற்குள் வாகனம் தரித்திருப்பது பற்றி ஒழுங்கான நிலையத்தை அறிவித்து நியமிப்பதற்கு முடியும்.

(2) பாதுகாப்பு நோக்கத்திற்காக அல்லது வேறு நோக்கத்திற்காக வாகனம் தரித்து நிலை நிறுத்தல் தடை செய்யப்பட்ட இடமாக தெளிவாக தெரியும் வண்ணம் காட்சிப்படுத்தும் அறிவித்தலினால் வாகனம் தரிக்க கூடாத இடங்களை அறிவித்தல் வேண்டும்.

3. துணை விதியில் காட்டப்பட்டுள்ள அறிவித்தல் மூலம் வாகனம் தரித்திருத்தல் தடை செய்யப்படும் இடங்கள் வாகன சாரதியினால் கடைபிடித்தல் வேண்டும்.-

(அ) உரிய அதிகாரியோ அல்லது அதிகாரியினால் அந்த தெருவின் அல்லது பாதையில் அல்லது கட்டமைக்கப்பட்டுள்ள காட்சிவைக்கப்பட்டுள்ள ஏதாவதொரு வாகன சமிஞ்சைக்கு அல்லது அறிவித்தலுக்கு உடன்பட்டு நடைமுறைப் படுத்தப்படுவதற்கு ; அல்லது

(ஆ) அந்த தெருவின் அல்லது பாதையில் அந்த நேரத்தில் காணப்படும் போக்குவரத்து முறையை உரிய முறையில் கடைபிடிப்பதற்கு ; அல்லது

(இ) ஏதாவதொருவருக்கு அந்த வாகனத்தில் இருந்து இறங்குவதற்கு அல்லது வாகனத்திற்கு ஏறுவதற்கு இடமளித்தல் ; அல்லது

(ஈ) அந்த வாகனத்திற்கு பொருட்கள் ஏற்றல் அல்லது அந்த வாகனத்தில் இருந்து பொருட்களை அகற்றல் ; அல்லது

ஆகிய காரணங்களுக்காக தேவையான காலம் தவிர அந்த வாகனம் தெருவில் அல்லது பாதையில் தரித்து வைத்தல் கூடாது.

4. தவிசாளர் அல்லது செயலாளரினால் இந்த துணைவிதியின் கீழ் வெளியிடப்படும் அனுமதிப்பத்திரம் தமது பொறுப்பில் இருப்பின் அன்றி எவர் ஒருவரினாலும் வாகனம் தரித்திருத்தலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் வாகனம் தரித்தல் கூடாது.

5. மேற்கூறப்பட்ட 4 ஆம் துணைவிதியில் உள்ளவாறு வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரத்திற்காக சபையின் சட்டத்தின்படி அனுமதிக்கப்பட்டு பிரசித்தப்படுத்தப்பட்ட கட்டணம் அறவிடல் முடியும்.

*6.* மேற்கூறப்பட்ட 4 ஆம் துணைவிதியில் அனுமதிப்பத்திரம் காலத்திற்கேற்ப அரச திணைக்களம், கூட்டுத்தாபனம் அல்லது கூட்டமைக்கப்பட்ட தனியார் சபையினால், சபை காலத்திற்கு காலம் விதிக்கப்படும் மாதாந்த கட்டணம் பிரதேச சபையிற்கு செலுத்தப்பட்ட பின் அந்த திணைக்களத்திற்கு, கூட்டுத்தாபனத்திற்கு அல்லது தனியார் சபைக்கு உரிய மோட்டார் வாகனத்திற்காக மாதாந்தம் அல்லது வருடாந்த அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள முடியும்.

*7.* மேற்கூறப்பட்ட துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் எல்லோரினாலும் அந்த அனுமதிப்பத்திரம் வாகனத்தின் வெளியில் விளக்கமாக தெரியும் வண்ணம் வாகனத்தினுள் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

*8.* ஏதாவதொரு வாகனம் தரித்திருக்கும் பொது இடத்தில், ஏதாவதொரு உரிய வகுப்பில் அல்லது பிரிவில் அல்லது மோட்டார் வாகனத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தில் எவர் ஒருவரினால் அந்த வகுப்பிற்கு அல்லது பிரிவிற்கு உரியதற்ற வேறு மோட்டார் வாகனம் தரித்திருத்தல் கூடாது.

*9.* வாகனம் தரிக்கும் பொது இடத்திற்கு உட்படும் அல்லது அதில் இருந்து வெளியேறும் அல்லது வேறு மோட்டார் வாகனத்திற்கு தடை ஏற்படும் வகையில் எவர் ஒருவரினாலும் வாகனம் தரிக்கும் பொது இடத்தில் மோட்டார் வாகனம் தரித்தல் கூடாது.

*10.* அனுமதிப்பத்திரத்தில் உண்மையாக குறிப்பிடப்பட்டுள்ள கால நேரம் தவிர வேறு கால எல்லையினுள் வாகனம் தரித்திருத்தல் கூடாது.

*11.* அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரினால் தமது வாகனத்தை தரிக்கும் போது வேறு ஒருவருக்கு அல்லது பொதுச் சொத்திற்கு அல்லது தனியாள் சொத்திற்கு தடை ஏற்படாத வண்ணம் சபையினால் குறிப்பிடப்படுமாறு வாகனம் தரித்தல் வேண்டும்.

*12. (1)* வாகனம் தரிக்கும் பொது இடத்தில் உள்ள வாகனத்தை ஒதுக்குவதற்காக அத்தியவசியமான புனரமைப்பு அன்றி வேறு இடத்தில் மோட்டார் வாகனம் புனரமைத்தல் கூடாது.

*(2)* வாகனம் தரிக்கும் இடத்தில் சமாதானத்தை மீறும் வகையில் ஏதாவதொரு செயல் அல்லது நட்டம் போன்ற செயல்களிலிருந்து விலகி இருத்தல் வேண்டும்.

*(3)* வாகனம் தரித்து இருக்கும் பொது இடத்தினுள் தரித்து இருக்கும் வாகனங்களில் முறையற்ற சப்தம் வெளியேறும் வகையில் வாகனத்தில் இருந்து தேவையற்ற முறையில் வாகனத்தின் என்ஜினை சுத்தப்படுத்தல் கூடாது.

*(4)* மோட்டார் வாகனம் தரிக்கும் பொது இடத்தில் மோட்டார் வாகனம் தரித்திருக்கும் போது எவர் ஒருவரினால் அந்த வாகனத்தை கழுவுதல் அல்லது கழுவுவதற்கு திட்டமிடல் கூடாது.

*13.* பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது போக்குவரத்து வாகன நிர்வாகியினால் வாகனம் தரிக்கும பொது இடத்தில் தரித்திருக்கும் ஏதாவதொரு வாகனத்தின் உரிமையாளரிடத்தில் அல்லது சாரதியிடத்தில் அந்த மோட்டார் வாகனத்திற்காக வெளியிடப்பட்டுள்ள வாகனத்தை தரித்து இருக்கும் அனுமதிப்பத்திரத்தை பரிசோதிப்பதற்காக முன்வைக்குமாறு கேட்டுக்கொள்ளும் எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும், அந்த அனுமதிப்பத்திரத்தை உரிமையாளர் அல்லது சாரதி முன்வைத்தல் வேண்டும்.

*14.* ஏதாவதொரு நகர பிரதேசத்தினுள் அல்லது பொது மக்கள் கூடுகின்ற ஏதாவதொரு உரிய இடத்தில் பிரதேச சபையினால் அனுமதிக்கப்படுகின்ற எல்லையினுள் ஏதாவதொரு வீதியில் அல்லது மாவத்தையில் வாகனம் தரித்து இருக்கும் கால எல்லையினுள் நிருவகிக்கும் நோக்குடன் அவ்வாறு தரித்து வைக்கும் கால எல்லைப்படி சபையினால் அனுமதிக்கப்படும் கட்டண அளவினை அறவிட முடிகின்றது.

*15.* பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் உள்ள ஏதாவதொரு மாவத்தையின் வீதியின் வருமானம் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் தரித்து வைக்கும் வாகனத்தினால் சபையினால் காலத்திற்கு காலம் அனுமதிக்கப்படுகின்றவாறு கட்டணம் அறவிடப்பட முடிகின்றது.

*16.* அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டு முச்சக்கரவண்டி தரித்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்போது அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் தரிக்கும் இடம் தவிர சபையினால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேறு தரிக்கும் நிலையங்களில் முச்சக்கர வண்டி தரித்து வைத்தலாகாது.

*17.* வாகனம் தரித்து வைப்பதற்காக பொது இடத்தில் கூலி கொடுத்து போக்குவரத்து செய்வதற்காக தரித்து இருக்கும் முச்சக்கர வண்டிக்காக கீழ் காணப்படும் உடன்படிக்கை உரியதாகும் :-

(1) 04 ஆம் துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கும் முச்சக்கர வண்டியின் உரிமையாளர் இல்லாது விடின் விண்ணப்பதாரியிடத்தில் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக முச்சக்கர வண்டியின் உரிமையாளரின் உடன்பாட்டுடன் பிரதேச சபையிடத்தில் எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

(2) அனுமதிப்பத்திரத்தில் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் அன்றி வேறு எந்த இடங்களில் முச்சக்கர வண்டியை கூலி பெறும் நோக்கில் தரித்து வைத்தல் கூடாது.

(3) கூலிக்காக போக்குவரத்து செய்வதற்கு மற்றவர்களின் உடன்பாட்டுடன் செய்துக்கொள்ளலாம். அதுபற்றி அவர்களுக்கு ஒரு நிலைக்கு வர முடியாதவிடத்து தவிசாளரினால் பெற்றுக்கொடுக்கப்படும் ஆலோசனைப்படி கூலிக்காக போக்குவரத்து செய்யலாம்.

18. இந்த துணை விதி எல்லா தினங்களிலும் முற்பகல் 6.00 தொடக்கம் பி. ப. 8.00 வரையிலான காலப்பகுதிக்கு உட்பட்டதாகும்.

19. இந்த துணை விதியை மீறுகின்றவர்களுக்கு பிரதேச சபைச் சட்டத்தின் 122 (2) பிரிவின்படி தண்டனை விதிக்கலாம்.

இந்த கால எல்லைகள் மற்றும் கட்டணம் தவிசாளரினால் சபையின் அனுமதியுடன் திருத்தும் உரிமை இருப்பதுடன், இதன் திருத்தம் வர்த்தமானி பத்திரிகை மூலம் அறிவித்தல் ஒன்று விடுதல் வேண்டும்.

இங்கு வாக்கியம் சம்பந்தமாக அர்த்தம் வேண்டியவிடத்து-

இங்கு துணைவிதியில் 'தவிசாளர்' என்பது பிரதேச சபையின் தவிசாளர்

'பிரதேச சபை' என்பது உரிய பிரதேச சபை,

'பொலிஸ் உத்தியோகத்தர்' என்பது பொலிஸ் சீருடையில் உள்ள இலங்கை பொலிஸ் சேவையில் பொலிஸ் உத்தியோகத்தர்,

'மோட்டார் வாகனம்' என்பது மோட்டார் வாகன விதியின் உரிய சட்டத்திட்டம்,

'போக்குவரத்து நிருவாகம்' என்பது வாகனம் தரித்து வைத்தல் சம்பந்தமாக முறையான நிர்வாகத்தை நடாத்தல்.

சேவைக்காக தவிசாளர் அல்லது செயலாளரினால் விதிக்கப்படுகின்ற எல்லா அரச பணிகளை நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்பட்ட பிரதேச சபை அலுவலகத்தின் உத்தியோகத்தர் அல்லது சேவையாளர்,

'செயலாளர்' என்பது உரிய பிரதேச சபையின் செயலாளர்,

'வாகனம் தரித்து வைத்தல் சம்பந்தமாக பொது நிலையம் மற்றும் வாகனம் தரித்து வைத்தல் தடை செய்யப்பட்ட இடம்' என்பது பிரதேச சபையில் கருத்துக்கள் மூலம் பெயர் குறிப்பிடப்படுகின்ற இடங்கள் என்று கருதப்படும்.

7-524/4

---

## பிரதேச சபை எல்லையினுள் நுளம்புகள் மற்றும் நோய்களை ஏற்படுத்தும் கிருமிகளை அழித்தல் பற்றிய துணை விதி

இந்த துணை விதி பிரதேச சபை எல்லையினுள் நுளம்புகள் நோய்களை ஏற்படுத்தும் கிருமிகள் தொற்றாமல் இருப்பதை தடுத்தல் மற்றும் அழித்தல் மூலம் அதிகாரப்பிரிவினுள் சூழ்நிலையை முன்னேற்றுவதற்காக மற்றும் தொற்று நோய் பரவாமல் இருப்பதற்காக விதிக்கப்படும்.

2. துணைவிதிப்படி பிரதேச சபை எல்லையினுள் எவர் ஒருவர் அல்லது தனியாரினால் எந்த ஒரு இடத்திலாவது நுளம்புகள் அல்லது நோய்களை ஏற்படுத்தும் கிருமிகளை அழிப்பதற்கு உறுதுணையாக உள்ளவற்றை கொண்டு நடவடிக்கை எடுத்தல் அல்லது எடுப்பதற்கு உறுதுணையாக இருத்தல் ஆகாது.

3. நுளம்புகள் மற்றும் நோய்க் கிருமிகளை அழித்தலுக்காக பிரதேச சபை பிரதேசத்தில் எல்லா இடங்களில் உள்ள வதியுனர்களினால்.-

(1) எல்லா மூடப்படாத ரின்கள், போத்தல், பெட்டி, பிளாஸ்டிக் கேன், ஒதுக்கப்பட்ட டயர், தேங்காய் சிரட்டை, தேங்காய் மூடி மற்றும் நீர் ஒன்று சேர்வதற்கு உதவியாக உள்ள இடங்கள், அந்த இடத்தில் உள்ள வேறு ஏதாவதொரு நீர் ஒன்று சேரக்கூடிய பொருட்கள், பாத்திரம் ஆகியனவற்றை ஒதுக்குவதற்கு அல்லது எந்த முறையிலாவது நிரந்தரமாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(2) நிரந்தர வதிவிடத்தில் உள்ள அல்லது இல்லாத இடங்களில் கட்டிடங்களில் நீர் வழியும் தாங்கி, கீழ் விழும் தாங்கி, கட்டமைப்புக்களில் மற்றும் வீட்டுத் தோட்டங்களில் உள்ள வடிகால்வாய்களில் இருந்து நீர் வழிந்தோடக்கூடியதாக அமைத்திருத்தல் வேண்டும். அவற்றில் தடைகள் ஏற்படாமல் எந்நேரமும் பரிசீலித்தல் வேண்டும்.

(3) நிரந்தர வதிவிடத்தில் உள்ள அல்லது இல்லாத இடங்களில் உள்ள எல்லா நீர் தாங்கிகள், நீர்த்தொட்டிகள் மற்றும் நீரை ஒன்று

சேர்க்கும் வேறு உபகரணங்களை உரிய முறையில் மற்றும் காலத்திற்கேற்ப புனரமைக்கப்பட்டு நடாத்திச் செல்வதற்கும், அவற்றில் நுளம்புகள் மற்றும் கிருமிகளில் இருந்து பாதுகாப்பு உள்ளவாறு மூடி வைப்பதற்கு அல்லது அவற்றில் நுளம்புகள், கிருமிகள் பரவுவதை தடுப்பதற்கான முறையில் பிரதேச சபையில் எந்த உத்தியோகத்தருக்காவது பரிசீலிப்பதற்கு உதவியளித்தல் வேண்டியதுடன், நுளம்புகள், கிருமிகள் பரவுவதை தடுப்பதற்காக தேவைப்படும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக அதற்கான வசதியும் பாதுகாப்பும் அளித்தல் வேண்டும்.

(4) காணிகளில் உள்ள எல்லா கிணறுகளையும் நல்ல முறையில் நடாத்திச் செல்வதுடன், நுளம்புகள், நோய்க்கிருமிகள் பரவாமல் மூடி பாதுகாப்பாக வைத்தல் அல்லது நுளம்பு நோய்க் கிருமிகள் பரவாமல் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(5) வெற்றுப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ள ஏதாவதொரு தடாகம் இருப்பின் இதனை ஒரு வாரத்திற்கு ஒரு முறையாவது சுத்தம் செய்தல் வேண்டும்.

(6) வீட்டுத் தோட்டங்களில் மற்றும் காணிகளில் உள்ள வடிகால்களில் வழிந்தோடும் நீர் ஒன்று சேராமலும் வண்டல் சேர்வதை தடுப்பதற்காக நாள்தோறும் சுத்தப்படுத்தல் வேண்டும்.

(7) உணவு சமைப்பதற்காக அல்லது அலங்காரத்திற்காக வளர்க்கப்படும் கன்றுகள் மற்றும் எல்லா காடுகள், போன்றவற்றை மனிதர்கள் வாழும் கட்டிடத்திற்கு அல்லது கட்டமைப்பிற்கு 50 மீற்றர் தூரத்தில் இருந்து ஒதுக்குப்புறமாக அமைத்தல் வேண்டும்.

(8) எல்லா கல் குழிகள், மாணிக்கம் தோண்டப்பட்ட குழிகள், களிமண் குழிகள் அல்லது வேறு எந்த காரணத்திற்காக தோண்டப்பட்ட குழிகளில் நீர் நிறையாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

(9) நீர் பெடரல், பாசி, எண்ணெய் பாசி, பரவா பாசி என்று சாதாரணமாக அறிமுகப்படுத்தப்படும் நீர் பயிர்கள் அல்லது நுளம்புகள் மற்றும் கிருமிகள் பரவுவதற்கு இடமுண்டு என்று எண்ணுகின்ற வேறு நீர் பயிர்களை நீக்கி துப்பரவு செய்து அழித்து விடல் வேண்டும்.

இந்த துணை விதியின் மேற்கூறப்பட்ட (9) துணை பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பயிர்கள் ஏதாவதொரு நீர் வழியாக மிதப்பதை தடை செய்வதற்கு முறையாக வழிவகைகளை கடைபிடித்தல் வேண்டும்.

(10) மலசலகூடம், பாசி நிறைந்த குழி, ஊற்றை ஈர்த்தெடுக்கும் குழி, முத்திரையிடப்பட்ட குழி மற்றும் அவற்றின் சுற்று சூழல் உட்பட அந்த இடத்தில் உள்ள எல்லா மலசலகூடங்களிலும் நுளம்புகள் பரவுவதை தடுப்பதை கொண்டு நடாத்தல்.

4. பிரதேச சபை தவிசாளரினால் அல்லது தற்போதைய தொழிலுக்காக பொதுவாக அல்லது விஷேடமாக எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட ஏதாவதொரு உத்தியோகத்தரினால் அல்லது ஏதாவதொரு தினத்தில் மு. ப. 6.00 தொடக்கம் பி. ப. 6.00 வரையினுள் ஒரு நேரத்தில் ஏதாவதொரு நிலையத்திற்கு உட்பட்டு கீழ்க் காணப்படும் காரணங்களை சான்றுபடுத்துவதற்காக அந்த நிலையத்தை பரிசீலித்தல் சட்டமாகும்:-

(1) அந்த இடம் நுளம்புகள் மற்றும் கிருமிகள் நடமாடும் இடமா என்பது பற்றி

(2) அந்த இடத்தில் குடியிருப்போரினால் துணை விதியில் இருக்கும் சட்டத்தை ஏற்றுக்கொண்டு நடத்துகின்றனரா என்பது பற்றி

(3) அந்த இடத்தில் நுளம்புகள் பரவுவதை தடுப்பதற்காகவும் இல்லாதொழிப்பதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கு ஏற்படுமாயின் அந்த ஏற்பாடு எது என்பது பற்றியும்,

(4) அந்த இடத்தில் கிருமி நாசினியை தெளிப்பதனை வெற்றிகரமாக செய்திருப்பது பற்றி

5. (1) தவிசாளரினால் அல்லது அவரினால் இந்த வேலைக்காக விஷேடமாக அல்லது பொதுவாக எழுத்துமூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட எந்த உத்தியோகத்தரினால் எந்த இடத்தில் அவசியம் என்று கருதும் பரிசீலனையின் பின், அந்த இடத்தில் நுளம்புகள் அல்லது நோய்க் கிருமிகளை அழிப்பதற்கும் அவை பரவுவதை தடுப்பதற்கும் தேவையான வழிவகைகளை எடுக்குமாறு எழுத்துமூலம் அறிவித்தலினை அந்த இடத்தின் உரிமையாளருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு கட்டளையிடலாம்.

(2) இந்த துணைவிதியில் மேற்கூறப்பட்ட (1) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல் ஒப்படைக்கப்பட்ட ஏதாவதொரு இடத்தின் உரிமையாளரினால் அல்லது குடியிருப்பாளரினால் அந்த அறிவித்தலில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் அதனை செய்து முடித்தல் வேண்டும்.

6. (1) தவிசாளரினால் எழுத்துமூல அனுமதியுடனும் அந்த இடத்தில் நுளம்புகள் மற்றும் நோய்க் கிருமிகள் பரவுவதை தடுப்பதற்காக உத்தியோகத்தரினால் அளிக்கப்படும் ஆலோசனைகளுக்கு முன்மாதிரியாக அன்றி ஏதாவதொரு இடத்தின் உரிமையாளரினால் அல்லது குடியிருப்பாளரினால் அங்கு ஒரு கிணற்றை கட்டமைத்தல் அல்லது நீர் தாங்கியை, நீர் தொட்டிகளையும், நீர் கொள்கலன்கள், நீர்பூக்கள் போன்ற வேறு நிரந்தர தாங்கிகளை அமைக்கக்கூடாது.

(2) இந்த துணைவிதியில் மேல் (1) இல் உள்ள வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்திட்டங்களுக்கு புறம்பாகும் வண்ணம் அந்த வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டமைப்பு செய்யப்பட்ட போது தவிசாளரினால் அந்த இடத்தில் உரிமையாளரினால் அல்லது குடியிருப்பாளரிடத்தில் பொறுப்படைக்கப்பட்ட எழுத்துமூல அறிவித்தல் படி அந்த அறிவித்தலில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் கிணறு, தாங்கி, தொட்டி, நீர் கொள்கலன்கள், நீர் பூ பாத்திரங்களில் கட்டமைப்பிற்காக உரியவற்றில் நீர் நிறைத்து மூடிவைக்குமாறு அல்லது எந்த வகையிலாவது அவற்றை அழித்துவிடுமாறும் இல்லாவிடின் அந்த காலத்தினுள் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதனை வேறுபடுத்துமாறு கட்டளையிடலாம்.

7. (1) 05 அல்லது 06 ஆம் துணைவிதிகளின் கீழ் அறிவித்தலினை ஒரு இடத்தின் உரிமையாளருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு பொறுப்படைக்கும் போது தனிப்பட்ட வகையில் பொறுப்படைத்தல் அல்லது அந்த நிலையத்தில் நன்றாக தெரிகின்ற வண்ணம் ஒட்டுவதன் மூலம் நடைமுறைப்படுத்தலாம்.

(2) ஏதாவதொரு இடத்தில் ஒரே தரமுடைய உரிமையாளர்கள் இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்களினால் கூட்டாக அங்கு வசிக்கும் நிலையில் அந்த உரிமையாளர்களின் ஒவ்வொரு உரிமையாளரும் 7 (1) ஆம் துணைவிதியின்படி மற்றும் 5 ஆம் துணைவிதியின் கீழ் அவர்களிடையே எவர் ஒருவருக்கு பொறுப்படைக்கும் அறிவித்தலின் கருத்துக்களை நிறைவேற்றல் சம்பந்தமாக ஏதாவதொரு கவனத்தில் கொள்ளாமல் விடுவதற்கு அல்லது செய்யாதிருப்பதற்கு பொதுவாக மற்றும் வெவ்வேறாக உரித்து கூறல் வேண்டும்.

(3) 05 அல்லது 06 ஆம் துணைவிதிகளின் கீழ் அறிவித்தல் பொறுப்படைக்கப்பட்ட ஏதாவதொரு இடத்தில் உரிமையாளரினால் அல்லது குடியிருப்பாளரினால் அந்த அறிவித்தல் உறுதியாக குறிப்பிடப்பட்ட காலத்தினுள் அந்த அறிவித்தலின் கூற்றுக்களை நிறைவேற்றுதலினை தடங்கள் செய்தல் அல்லது செய்யாதுவிடுகின்ற நிலையில், தவிசாளரினால் அல்லது அந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட உத்தியோகத்தரினால் அல்லது உரிய காரணத்திற்காக அதிகாரம் அளிக்கப்பட்ட எந்த ஒரு உத்தியோகத்தரினால் எந்த ஒரு தினத்தில் மு. ப. 6.00 தொடக்கம் பி. ப. 6.00 வரை நேரத்தினுள் தேவைப்படுகின்ற உதவியாளர்கள் மற்றும் சேவையாளர்களுடன் உரிய நிலையத்திற்கு உட்பட்டு அந்த அறிவித்தலில் உண்மையாக குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கை அல்லது தொடர்களை நடைமுறைப்படுத்துவதற்கு அல்லது நடைமுறைப்படுத்துமாறு பணித்தல் அல்லது நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட பணிக்கலாம்.

(4) ஏதாவதொரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரிடத்தில் 5 ஆம் 6 ஆம் மற்றும் 7 ஆம் துணைவிதியின் கீழ் பொறுப்படைக்கப்பட்ட அறிவித்தலில் உண்மையாக குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு காரணம் அல்லது முடிவினை தவிசாளரினால் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் நடைமுறைப்படுத்தப்பட்ட போது அல்லது செய்து முடித்த போது பொறுப்பேற்கப்பட்டவருக்கு ஏற்பட்ட செலவின் அளவு, அந்த இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரினால் தவிசாளரிடத்தில் செலுத்த வேண்டும். தவிசாளர் தனது கையொப்பத்தின் கீழ் அது பற்றி எழுத்துமூலம் கேட்கப்படும் கோரிக்கையின் பின் 14 தினத்தினுள் அந்த தொகையை உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரினால் செலுத்த வேண்டியதுடன் அவ்வாறு செலுத்தப்படாவிடின் அதனை பிரதேச சபைக்கு கிடைக்க வேண்டிய தண்டப்பணமாக அந்த உரிமையாளரிடத்தில் அல்லது குடியிருப்பாளரிடத்தில் இருந்து அறவிடப்படுவது சட்டமாகும்.

8. இந்த துணை விதிகளில் ஏதேனும் ஒன்றை சட்டப்படி நடைமுறைப்படுத்தும் போது எவர் ஒருவரினாலும் தெரிந்து தெரிந்து அல்லது வேண்டுமென்று தலைவருக்கு அல்லது அதிகாரம் உள்ள உத்தியோகத்தருக்கு தடை அல்லது தடங்கள் ஏற்படுத்தல் செய்யலாகாது.

9. இந்த துணைவிதிகளை மீறுதல் பற்றி பிரதேச சபை சட்டத்தின் 122 (2) ஆம் பிரிவின் படி நடவடிக்கை எடுப்பது சட்டமாகும்.

10. வாக்கியம் பற்றிய அர்த்தம் தேவை ஏற்படின்,

'உரிமையாளர்' என்பது உரிமையாளர் மற்றும் குத்தகையாளர் ஏதாவதொரு இடத்தில் கூலிக்கு அல்லது பயனுக்குரிய உரிமைக்கு உவப்புடைய ஏதாவதொருவர்.

'குடியிருப்பாளர்' என்பது ஏதாவதொரு இடத்தில் குடியிருக்கும் அல்லது தமக்காக அல்லது இன்னொருவருக்காக முகவராக அல்லதுபொறுப்புடையவராக, முகாமைத்துவ அல்லது நிர்வாகத்தை நடாத்துபவர் என்றாலும் தற்காலிக குடியிருப்பாளர் அல்ல,

'அதிகாரம் உள்ள உத்தியோகத்தர்' என்பது உரிய தவிசாளரினால் எழுத்துமூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட அந்த சபையின் ஏதாவதொரு உத்தியோகத்தர், சேவையாளர்,

'சபை' என்பது உரிய பிரதேச சபை,

'தவிசாளர்' என்பது பிரதேச சபையின் தவிசாளர்

'இடம்' என்பது ஏதாவதொரு காணி, வீடு, கட்டிடம் அல்லது கட்டமைப்புக்குட்பட்டதாவதுடன் ஏதாவதொரு நீர் தொட்டி, நீர் தாங்கி, குளத்தின் நீர்மார்க்கம், வடிகால் அல்லது ஆற்றின் முடிவு என்று கருதப்படும்.

### பிரதேச சபை எல்லைக்குள் பாதைகள், ஒழுங்கைகளை அழகுபடுத்துவது பற்றி இடைநிலைச் சட்டம்

இந்த இடைநிலைச் சட்டம் பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குள் பொது இடங்கள், ஒழுங்கைகள் மற்றும் பாதைகளை அழகுபடுத்துவதன் மூலம் சூழலுக்கு ஏற்படும் அழிவினை கட்டுப்படுத்தல், பொது மக்களுக்கு ஏற்படும் தடங்களை தடுப்பதை முறைப்படுத்தல், நிருவகித்தல் மற்றும் பரிபாலித்தலுக்காக விதிக்கப்படும்.

2. பிரதேச சபையினால் அதற்காக வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரப்படி எவர் ஒருவரினாலும் பிரதேசத்தில்ஏதாவதொரு பொது இடத்தில், ஒழுங்கையில், பாதையில் ஏதேனும் முறையில் அழகுபடுத்தல் கூடாது.

3. மூன்றாவது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக முன்வைக்கப்படுகின்ற எல்லா விண்ணப்பப்பத்திரமும் இங்கு 1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு முன்மாதிரியாக அமைக்கப்பட்டு முன்வைத்தல் வேண்டும்.

4. முன்வைக்கப்படுகின்ற எல்லா விண்ணப்பப்படிவமும் அழகுப்படுத்தல் ஆரம்பிப்பதற்கு எண்ணியுள்ள தினத்திற்கு 03 தினங்களுக்கு முன் தவிசாளர் அல்லது செயலாளரிடத்தில் முன்வைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் இந்த துணை விதியின் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லையினுள் முன்வைக்கப்படாத அவ்வாறான விண்ணப்பப்படிவம் விஷேட காரணத்திற்காக கவனத்தில் கொண்டு தவிசாளர் அல்லது செயலாளரினால் பெற்றுக்கொண்டு அது பற்றி நடவடிக்கை எடுக்க முடியும்.

5. மேல் கூறப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரத்தில் உள்ள எல்லா விபரமும் அதற்கு மேலதிகமாக விண்ணப்பப்படிவம் சம்பந்தமாக தீர்மானம் எடுப்பதற்காக தவிசாளர் அல்லது செயலாளரினால் கேட்கப்படுகின்ற வேறு ஏதேனும் தகவல்கள் இருப்பின் அந்த எல்லா விபரமும் எல்லா விண்ணப்பதாரியினாலும் வழங்கப்பட வேண்டும்.

6. சபையினால் வெளியிடப்படுகின்ற எல்லா அனுமதிப்பத்திரமும்.-

(1) இங்கு 2 ஆம் அட்டவணையில் உள்ள விண்ணப்பப் படிவத்தின் படி இருத்தல் வேண்டும்.

(2) அந்த அனுமதிப்பத்திரம் ஏதாவதொரு தடைசெய்வதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு உடன்பட்டு வெளியிடப்பட்ட அலுவல்கள் உரிய காலத்திற்காக மாத்திரம் நேர்தகவுடையதாதல் வேண்டும்.

7. அனுமதி பெறுனரினால் செய்யப்படும் எல்லா அழகுப்படுத்தலும் உரிய ஒழுங்கைகளில் போக்குவரத்து செய்கின்ற தனியாள் அல்லது கூட்டமைப்பு அல்லது போக்குவரத்து செய்கின்ற ஏதாவதொரு வாகனத்திற்கு தடை ஏற்படும் வகையில் அழகுப்படுத்தல் கூடாது.

8. செய்யப்படும் அழகுப்படுத்தல் எவர் ஒருவருக்கு, குழுவிற்கு நேர்மையாக அல்லது சூழ்ச்சிகரமாக துஷ்பிரயோகமான முறையில் இல்லாதிருத்தல் வேண்டும்.

9. கீழ்க் காணப்படும் காரணம் பற்றி அதாவது-

(1) வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் இந்த துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்களை மீறுவதற்காக பயன்படுத்தாமை பற்றியும்,

(2) அனுமதிப்பத்திரம் மூலம் அனுமதி கிடைத்த செயற்பாட்டினால் மனிதனுக்கு அல்லது சூழலுக்கு அல்லது பொது சொத்துக்களுக்கு நட்டம் அல்லது கெடுதி ஏதாவதொரு பொருட்களுக்கு ஏற்படாது என்பது பற்றியும்,

(3) சூழலை பாதுகாப்பதற்காக விண்ணப்பதாரியினால் போதியளவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது பற்றியும்

திருப்தி அடைந்தால் மாத்திரம் உரிய அனுமதிப்பத்திரம் வழங்க முடியும்.

10. (1) அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக கட்டணமாக சபையினால் காலத்திற்கு காலம் கருத்துக்கள் மூலம் சட்டமாக்கப்பட்ட கட்டணத்தின் அளவு அறவிட முடியும். அந்த கட்டணம் தொடர்பாக வர்த்தமானியில் அறிவிக்க முடியும்.

(2) அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்ற நிலையில் அனுமதிப்பத்திரதாரியினால் செய்யப்படும் அலங்காரத்தின் அளவினை கருத்தில் கொண்டு வைப்புத் தொகை ஒன்றினை சபையில் வைப்பு வைத்தல் வேண்டும். அந்த வைப்புத் தொகை சபையினால் காலத்திற்கு காலம் கருத்துக்களினால் தீர்மானிக்கப்படும்.

11. (1) அனுமதிப்பத்திரதாரியினால் செய்யப்பட்ட அலங்காரம் உரிய காலத்தினுள் அகற்றப்படாவிடின் உரிய அலங்காரம் சபையினால் அகற்றுவதற்கான செலவினை பெற்றுக் கொள்வதற்காக அனுமதிப்பத்திரதாரியினால் வைப்பிலிட்ட தொகையை சபை ஒதுக்கு நிதியிற்கு வரவு வைத்தல் சட்டமாகும்.

(2) அனுமதிப்பத்திரதாரியினால் உரிய காலத்தினுள் அலங்காரத்தை அகற்றிய பின் வைப்பிலிடப்பட்ட தொகையை மீள பெற்றுக்கொள்வதற்காக 06 மாதத்தினுள் மீளப் பெறாவிடின் அந்த வைப்புப் பணம் சபை வருமானத்திற்கு வரவு வைத்தல் வேண்டும்.

*12. அனுமதிப்பத்திரதாரியினால் பாதையின் இரு பக்கத்திலும் உள்ள காணிகளில் உள்ள சொத்துக்களுக்கு அல்லது அந்த ஒழுங்கைகளில் போக்குவரத்து செய்யும் பொது மக்களுக்கு அல்லது சொத்துக்களுக்கு தடை ஏற்படாத வண்ணம் அலங்கரித்தல் கூடாது. அதன் மூலம் ஏதாவதொரு நட்டம் ஏற்படுமாயின் அந்த நட்டத்திற்கான பொறுப்பை அனுமதிப்பத்திரதாரியினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.*

*13. அலங்காரம் செய்யும்போது வெளியேற்றப்படும் எல்லா பொருட்களும் சூழலை மாசுபடுத்தும் வகையில் வெளியேற்றப்படலாகாது என்பது அனுமதிப்பத்திரதாரியின் பொறுப்பாகும்.*

*14. அலங்காரம் செய்வதற்காக சபையினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது பொலிஸ் உத்தியோகத்தரினால் பரிசீலிப்பதற்காக கேட்கப்படும்போது முன்வைத்தல் வேண்டும்.*

*15. அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அலங்காரத்தை அகற்ற வேண்டிய தினம் மற்றும் நேரம் ஆகியவற்றை மீறாத வகையில் அலங்காரத்தை அகற்றுவதற்கு அனுமதிப்பத்திர உரிமையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*16. இந்த இடைநிலைச்சட்டத்தில் ஒன்றையேனும் மீறுவதாயின் உரிய அதிகாரம் உள்ள நீதிமன்றத்தினால் அது பற்றி குற்றவாளிகளுக்கு தண்டனை அளிப்பதற்கு பிரதேச சபை தவிசாளருக்கு அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் பொறுப்படைக்கப்பட்ட பின் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 (2) ஆம் பிரிவின் கீழ் தண்டனைக்கு உள்ளாவார்.*

*வாக்கியம் பற்றிய அர்த்தம் தேவைப்படின், இந்த துணைவிதியில் 'அலங்காரம்' என்பது இயற்கையாக, செயற்கையாக அல்லது ஏதாவதொரு பொருட்களினால் மற்றும் வெளிச்ச சைகையினால் செய்யப்படும் ஏதாவதொரு அலங்காரம் என்று கருதப்படும்.*

*'ஒருவர்' என்பது தனியார், குழு, ஏதாவதொரு நிறுவனம், ஏதாவதொரு அமைப்பு.*

*'பாதைகள்', 'ஒழுங்கைகள்' என்பது (193 ஆம் அதிகாரி) ஒழுங்கைகளின் ஒழுங்கு விதி ஒழுங்காக வழங்கப்பட்டுள்ள கருத்து,*

*'பொது சொத்து' என்பது உரிய பிரதேச சபை அதிகார பிரிவிற்குள் எல்லா பாதைகளும் ஒழுங்கைகளும் இரு பக்கங்களிலும் அமைந்துள்ள தொலைபேசி, மின் கம்பம், பொது மக்கள் பொதுவாக உபயோகப்படுத்தப்படும் எல்லா இடங்களிலும் உள்ள சொத்துக்கள்,*

*'பொலிஸ் உத்தியோகத்தர்' என்பது பொலிஸ் சீருடை அணிந்துள்ள இலங்கை பொலிஸ் சேவையின் உத்தியோகத்தர்,*

*'அதிகாரம் உள்ள உத்தியோகத்தர்' என்பது உரிய பிரதேச சபையின் தவிசாளரினால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள சபையின் உத்தியோகத்தர்,*

*'செயலாளர்' என்பது பிரதேச சபையிற்காக நியமிக்கப்பட்ட செயலாளர்,*

*'சபை' என்பது உரிய பிரதேச சபையாகும்,*

*'தவிசாளர்' என்பது பிரதேச சபையின் தவிசாளர் ஆவார் என்பது கருத்தாகும்.*

**1 ஆம் அட்டவணை**

**பாதைகள் ஒழுங்கைகள் அலங்காரம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம்
பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பப்படிவம்**

1. விண்ணப்பதாரியின் பெயர் :
2. விண்ணப்பதாரியின் முகவரி :
3. விண்ணப்பதாரியின் தொலைபேசி எண் :
4. விண்ணப்பதாரியின் ஆளடையாளட்டை இலக்கம் :
5. அலங்காரம் செய்யும் வீதி அல்லது இருப்பக்கத்தையும் அறிமுகப்படுத்தும் பெயர் :
6. அலங்காரப்படுத்துவதற்கு எண்ணியுள்ள திகதி:
7. அலங்காரப்படுத்துவதற்கு உபயோகப்படுத்தப்படும் பொருள் :
8. அலங்காரம் அகற்றப்படும் திகதி :
9. கழிவுப்பொருட்களை ஒதுக்குவதற்கான வழிவகைகள் :

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

பரிசோதித்தேன். மீட்டர்/வர்க்க மீட்டர் .......................... அலங்கரிப்பதற்காக கட்டணமாக ரூ. ................ அறவிடுவதற்கு அனுமதிக்கின்றேன்.

அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

**2 ஆம் அட்டவணை**

***பாதைகள் ஒழுங்கைகள் அலங்காரம் செய்வதற்காக அனுமதிப்பத்திரம்***

1. விண்ணப்பதாரியின் பெயர் :
2. விண்ணப்பதாரியின் முகவரி :
3. விண்ணப்பதாரியின் தொலைபேசி எண் :
4. அலங்காரம் செய்யும் பிரதேசம்/வீதி :
5. அலங்காரப்படுத்துவதற்கு எண்ணியுள்ள திகதி :
6. அலங்காரம் அகற்றப்படும் திகதி :

கட்டணம் செலுத்தப்பட்ட திகதி ......................... தொகை ரூ.......................

பற்றுச்சீட்டு இலக்கம் .................................

நிபந்தனைகளும் அனுமதியும் :-

மேற்கூறப்பட்ட விபரத்தையும் ஒப்பந்தத்தையும் கவனத்தில் கொண்டு உரிய பாதையில் அலங்காரம் செய்வதற்கு அனுமதிக்கின்றேன்.

| | | |
|---|---|---|
| ................ | ............... | .................. |
| சரிசெய்யப்பட்டது | பரிசோதிக்கப்பட்டது | அனுமதிக்கப்பட்டது |

7-524/6

---

**உறைவிடங்கள், தரிப்பிடங்கள் பற்றிய துணை விதி**

பிரதேச சபை அதிகாரப்பிரிவினுள் 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது அவ்வாறான பதிவு செய்யப்படாமல் நடாத்திச் செல்லும் ஹோட்டல், உறைவிடமும் தரிப்பிடங்கள் முறைப்படுத்துவதற்காக இந்த துணை விதி விதிக்கப்படுகின்றது.

2. (1) தவிசாளரினால் வெளியிடப்பட்ட முறையான அனுமதிப்பத்திரத்தின்கீழ் அன்றி எவர் ஒருவரினாலும் பிரதேச சபை அதிகார பிரதேசத்தினுள் ஹோட்டல் ஒன்றை, உறைவிடம் ஒன்றை அல்லது தரிப்பிடத்தை நடாத்திச் செல்லக்கூடாது.

(2) இந்த துணைவிதியில் முதலாவது பந்தியின் கீழ் வழங்கப்படுகின்ற அதிகாரப்பத்திரத்திற்காக சபையினால் வர்த்தமானியின் மூலம் அறிவித்தலை வெளியிடுவதற்காக கட்டணம் செலுத்தப்பட வேண்டும். செல்லுபடியாகும் காலம் சபையினால் உரிய திகதிக்கு முன் செல்லுபடியற்றதாக செய்யப்படின் அன்றி அதனை வெளியிடப்பட்ட வருடத்தின் திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைதல் வேண்டும்.

(3) சபையினால் வெளியிடப்படுகின்ற எல்லா அதிகாரப்பத்திரமும் இங்கு 2 ஆம் அட்டவணையில் உள்ளவாறு அமைத்தல் வேண்டும்.

3. மேல் கூறப்பட்ட 02(1) துணை விதியின் கீழ் வழங்கப்படுகின்ற எல்லா அதிகாரப் பத்திரத்திலும் உறைவிடத்தின் ஹோட்டலின் அல்லது தரிப்பிடத்தில் உள்ள தனி அறை மற்றும் இருவருக்கான அறைகளின் எண்ணிக்கையை வெவ்வேறாக குறிப்பிடப்படல் வேண்டியதுடன், உறைவிடத்தின், தரிப்பிடத்தில் தங்குவதற்கான வசதி அளிப்பதற்கு முடியுமான ஆகக்கூடிய எண்ணிக்கையினை குறிப்பிடப்படல் வேண்டும்.

4. 02(1) துணைவிதியின் கீழ் வழங்கப்படுகின்ற அதிகாரப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக இந்த துணைவிதிகளில் 1 ஆம் அட்டவணைக்கு ஒத்ததாக அமைக்கப்பட்ட விண்ணப்பப்படிவம், கட்டிடத்தின் வரைபடத்துடன் தவிசாளரிடத்தில் முன்வைத்தல் வேண்டும்.

5. (1) உறைவிடத்தில் தரிப்பதற்காக இங்கு இலக்கம் 6 தொடக்கம் 13 வரையிலான துணைவிதிகளில் உள்ள உடன்படிக்கைகளுக்கு உடன்படாவிடின் அதிகாரப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கான உரிமை கிடைக்கப்பெற மாட்டாது.

(2) அதிகாரப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பத்தினை ஏற்றுக்கொள்ளாதவிடத்து, அதற்கான காரணம் விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்று 06 வாரத்தினுள் தவிசாளரினால் விண்ணப்பதாரியிற்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

6. (1) சூழல் பொது பாதையை முன்னோக்கி அமைந்திருக்காவிடின் அதற்கு உள்செல்வதற்காக முறையான பிரவேச பாதை இருத்தல் வேண்டும்.

(2) கட்டிடம் உறுதியாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டியதுடன், முறையாக கொண்டு நடாத்தல் வேண்டும்.

(3) கூரை உறுதியாக மற்றும் காலா காலம் பாவிக்கக்கூடியதான பொருட்களினால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) கட்டிடத்தினுள் ஒன்று சேர்க்கப்படும் கழிவுப் பொருட்கள் தினமும் வெளியேற்றப்படும் முறையை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

7. (1) இருப்பிடதாரியிற்காக ஒதுக்கப்பட்டுள்ள அறையின் நிளத்தின் அளவு வர்க்க அடி 90 ஆக இருத்தல் வேண்டியதுடன், ஒருவருக்கு கூடிய எண்ணிக்கையில் உறங்குவதற்கான வசதி அளிக்கப்படும் அறையில் ஒருவருக்காக ஒதுக்கப்பட்ட அளவு வர்க்க அடி 60 இற்கு குறைதல் ஆகாது.

(2) எல்லா அறைகளுக்கும் காற்றோட்டமும் வெளிச்சமும் பெற்றுக்கொள்வதற்காக திறக்கக்கூடிய யன்னல் பொறுத்தப்பட வேண்டும். யன்னல் திறந்த போது ஒவ்வொரு யன்னல்களின் அளவு அறைகளின் வர்க்க அடி 1/5 இற்கு குறையாதிருத்தல் வேண்டும்.

(3) எல்லா அறைகளினதும் சுவர் 10 அடிக்கு குறையாது இருத்தல் வேண்டும்.

(4) வீட்டு தரை நீர் உறிஞ்சிக் கொள்ளாததும் கசிவு ஏற்படாத பொருட்களினால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(5) ஒவ்வொரு அறையிலும் தங்குகின்றவர்களின் எண்ணிக்கைப்படி போதியளவில் கட்டில்களின் எண்ணிக்கையும் கதிரைகளின் எண்ணிக்கையும் மேசை, சிறிய இராக்கை மற்றும் கண்ணாடி ஒன்றும் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(6) எல்லா கட்டில்களுக்கும் நுளம்பு வளை வழங்கப்படுதல் வேண்டும்.

(7) தங்குனர்களின் எண்ணிக்கைப்படி சுத்தமான கட்டில் விரிப்பு, தலையணை மற்றும் தலையணை உரை வழங்கல் வேண்டும். தங்கி இருப்போர் இடம் மாறும் சந்தர்ப்பங்களில் கட்டில் விரிப்பு, தலையணை மற்றும் தலையணை உரை மாற்றல் வேண்டும். தங்குனர் நாட்கணக்கில் தங்குவோராயின் குறைந்தபட்சம் நான்கு நாட்களுக்கு ஒருமுறை கட்டில் விரிப்பு, தலையணை மற்றும் தலையணை உரை மாற்றல் வேண்டும்.

(8) கதவுகள் முறையாக மூடிவைக்கக்கூடிய வகையில் பூட்டு பொறுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(9) யன்னல்களுக்கு திரைச்சேலை பொறுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(10) வெளியேற்றப்படுபவைகளை போடுவதற்காக முறையான அளவில் பெட்டிகள் வழங்கப்படல் வேண்டும்.

(11) அறைகளில் சுவரிலும் கதவு, யன்னல்களில் வர்ணம் தீட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

(12) குடிப்பதற்கும் குளிப்பதற்கும் உகந்த நீர் வழங்கப்படல் வேண்டும்.

8. (1) உணவு உற்கொள்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மண்டபம் தங்கி இருப்போரின் எண்ணிக்கைப்படி போதுமான அளவில் பெரியளவில் அமைத்திருத்தல் வேண்டும்.

(2) உணவு உண்ணும் மேசைகள் மற்றும் கதிரைகள் போதியளவில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) சுவர், சிவிலின் கதவு யன்னல் தரை மரத்தளபாடம் போன்றன சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

9. (1) தங்கி இருப்போரின் எண்ணக்கைப்படி போதியளவில் பாரியதான உணவகம் இருத்தல் வேண்டும்.

(2) பெரியளவில் காற்றோட்டம் மற்றும் வெளிச்சம் கிடைக்கும் வண்ணம் யன்னல் பொறுத்தப்பட்டிருத்தல் வேண்டியதுடன் உஷ்ணமான காற்றும் புகையும் முறையாக வெளியேறுவதற்காக யன்னல்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) தரை நீரை உறிஞ்சிக் கொள்ளாததும் கசிவு ஏற்படாததுமான பொருட்களினால் கட்டமைக்கப்பட்டிருத்தல் வேண்டியதுடன் இலகுவாக சுத்தம் செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(4) உணவகத்தின் சுவர் இலகுவாக சுத்தம் செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டியதுடன் 5 அடி உயரத்திற்கு நீர் உறிஞ்சிக் கொள்ளாததும் கசிவும் ஏற்படாத பொருட்களினால் வெளிப்புறம் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(5) கழிவுப் பொருள் இடுவதற்காக மூடப்பட்ட கொள்கலனை வைத்திருத்தல் வேண்டும்.

(6) சரக்கு வகை மற்றும் உணவு பொருட்கள் வைத்துக் கொள்வதற்காக மூடியுடனான கொள்கலன்களை உபயோகித்தல் வேண்டும்.

(7) எல்லா வடிகால்களையும் உற்பிரவேசிப்பு கதவுகளையும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டியதுடன் சுத்தமற்ற நீர் நன்றாக வழிந்தோடக்கூடியதாக வைத்திருத்தல் வேண்டும்.

(8) உணவு சமைக்கும் போது சுத்தத்தை மிக முக்கிய கவனத்தில் கொள்ள வேண்டும்.

(9) சமைக்கப்பட்ட உணவு தூசி, கழிவுப் பொருட்கள் மற்றும் ஈ, பூச்சி ஆகியவற்றில் இருந்து பாதுகாத்தல் வேண்டும்.

(10) உணவகத்தின் சிவிலின் சுவர் கதவு யன்னல் மற்றும் மரத்தளபாடங்கள் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

(11) உணவகத்தின் எல்லா வகையிலுமான வண்டுகள் மற்றும் ஈ, எலி போன்றவற்றிலிருந்து பாதுகாத்தல் வேண்டும்.

10. (1) போதியளவில் காற்றும் வெளிச்சமும் கிடைக்கும் வண்ணம் களஞ்சியசாலை அமைத்திருத்தல் வேண்டும்.
(2) தரையை நீர் உறிஞ்சாமலும் கசியாத பொருட்களினால் கட்டமைத்திருத்தல் வேண்டும்.
(3) மேசை உபகரணம் மற்றும் உணவு வைத்திருக்கும் உபகரணம் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.
(4) வண்டுகள், ஈக்கள் எலிகள் போன்றவற்றில் இருந்து பாதுகாத்தல் வேண்டும்.

11. (1) போதியளவில் குளியலறை அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
(2) எல்லா குளியலறைகளும் 35 வர்க்க அடியை உடையதாக இருத்தல் வேண்டும்.
(3) எல்லா குளியலறைகளிலும் டவல் வைக்கும் உபகரணம், சவர்க்காரம் வைக்கும் தாங்கி, முகக்கண்ணாடி, முகம் கழுவும் பாத்திரம் மற்றும் நீரைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியான பாத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
(4) கழிவு நீர் வழிந்தோடுவதற்காக வடிகால் அமைத்திருத்தல் வேண்டியதுடன் அந்த நீரை ஒன்று சேர்ப்பதற்காக மூடப்பட்ட குழிகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

12. (1) எல்லா அறைகளுக்கும் ஒதுக்கப்பட்ட மலசலகூட வசதி இல்லாதுவிடின் பெண்கள் மற்றும் ஆண்களுக்காக வெவ்வேறாக மலசலக்கூடம் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
(2) எல்லா அறைகளுக்கும் ஒதுக்கப்பட்ட மலசலகூட வசதி இல்லாதுவிடின் தங்கியிருப்போர் ஐவருக்கு ஒன்று என்ற வகையில் மலசலகூடம் அமைத்திருத்தல் வேண்டும்.
(3) மலசலகூடத்திற்கு குழாய் நீர் வசதி அளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
(4) எல்லா மலசலகூடத்திற்கும் சுகாதார முறையான வாளி சவர்க்காரம், சவர்க்கார பெட்டி, டொய்லட் பேப்பர் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.
(5) தரைகளிலும் சுவர்களிலும் 5 அடி வரை உயரத்திற்கு நீந் உறிஞ்சாததும் கசியாததுமான பொருட்களினால் அமைக்கப்பட்டிருத்தலுடன், நல்ல முறையில் கொண்டு நடாத்தல் வேண்டும்.
(6) எல்லா மலசலகூடமும் நல்ல முறையில் கொண்டு நடாத்தல் வேண்டும்.
(7) எல்லா மலசலகூடமும் சுகாதார முறையில் தினமும் சுத்தம் செய்தல் வேண்டும்.

13. (1) கட்டிடத்திற்கு வெளியில் உள்ள சூழலை கழிவுப் பொருட்களில் இருந்து சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.
(2) நல்ல நீரோட்ட சூழலை அமைத்திருத்தல் வேண்டும்.
(3) தரிப்பிடத்திலிருந்து வெளியேற்றப்படும் அசுத்த நீர் ஒன்று சேர்வதற்காக முறயைாக குழிகள் வெட்டப்பப்பட்டிருத்தல் வேண்டும்.
(4) நுளம்புகள் வண்டுகள் பரவாமல் இருக்கும் வகையில் குழிகள் முறையாக கொண்டு நடாத்தல் வேண்டியதுடன் எவ்விதத்திலும் நாற்றம் ஏற்படாமல் மிகவும் கவனமாக பாதுகாத்தல் வேண்டும்.
(5) தரிப்பிடத்தில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் புதைப்பதற்காக அல்லது சுகாதார பாதுகாப்பு முறையில் வெளியேற்றுவதற்கான வழிவகைகளை செய்தல் வேண்டும்.
(6) சூழலினுள் கோழிகள் மாடுகள் பன்றிகள் போன்ற மிருகங்கள் வைத்திருத்தல் கூடாது.

14. (1) இந்த இடைநிலை விதிகளின்படி அதிகாரப்பத்திரம் வழங்குவதற்கு முதலாவது தவிசாளரினால் விண்ணப்பப்படிவம் கிடைத்து 07 தினங்களுக்குள் அதன் பிரதி ஒன்றை பிரதேசத்தின் சுகாதார வைத்திய உத்தியோகத்தருக்கு அனுப்ப வேண்டும்.

(2) எல்லா விண்ணப்பப்படிவங்களும் தமக்கு முன்வைத்ததன் பின் உரிய சூழலை பரிசோதித்து தமது பரிசீலிப்பையும் அனுமதியினையும் ஏழு தினங்களினுள் தவிசாளருக்கு அனுப்புதல் சுகாதார வைத்திய உத்தியோகத்தரின் அலுவலாகும்.

15. எல்லா உறைவிட தரிப்பிடலாளர்களின் அனுமதிபத்திரதாரியினால் அவரின் பெயருக்கு மற்றும் அதிகாரப்பத்திரம் கிடைக்கப்பெற்ற உறைவிடத்தின் பெயருக்குரிய வசனம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட அறிவித்தல் பலகை சூழலில் முன்பக்கத்தில் நன்றாக பார்வையில்படும் வண்ணம் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

16. எல்லா அதிகாரபத்திரதாரியும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் அமைக்கப்பட்ட இந்த இடைநிலை விதிகளில் பிரதி மற்றும் அதிகாரப்பத்திரம் சட்டத்தில் இடப்பட்டு தரிப்பிடத்தில் தெளிவாக பார்வையில்படும் இடத்தில் வைக்கப்பட்டிருத்தலுடன், தவிசாளரினால்

அல்லது அவரின் அதிகாரத்தை அளிக்கப்பட்ட ஒருவரினால் சாதாரண காலநேரத்தினுள் பரிசீலித்து பார்ப்பதற்கு முடியுமான வகையில் தரிப்பிடத்தில் சேவை செய்கின்ற எல்லா சேவையாளர்களின் பெயர் மற்றும் முகவரி உள்ளடங்கிய அட்டவணையை அமைத்து வைத்திருத்தல் வேண்டும்.

17. அதிகார பத்திரத்திற்கு இணைக்கப்பட்ட தவிசாளரினால் கையொப்பமிடப்பட்ட திட்டத்தில் உறங்கும் அறைகளை விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள அறைகள் தவிர வேறு எந்த அறைகளிலும் உறங்குவதற்காக அதிகாரபத்திரதாரி எந்த விதத்திலும் தரிப்பிடலாளருக்கு அனுமதி அளிக்கப்படலாகாது.

18. எந்த அறைகளிலும் உறங்குவதற்காக தவிசாளரினால் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கைக்கு அதிக அளவானவர்களின் எண்ணிக்கை அந்த அறையில் உறங்குவதற்கு தரிப்பிட அனுமதிப்பத்திரயாளரினால் அனுமதி அளிக்கக்கூடாது. இந்த துணை விதி அலுவலுக்காக 10 வயதிற்கு குறைந்த பிள்ளைகள் இருவரும் ஒரு வளர்ந்தவர் என்ற முறையில் இருத்தல் வேண்டும்.

19. அறையின் அளவும் அந்த அறையில் உறங்குவதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளவர்களின் அதிகூடிய எண்ணிக்கையை குறிப்பிடப்பட்ட அறிவித்தல் பலகை அனுமதிப்பத்திரதாரரினால் ஒவ்வொரு அறையிலும் பொருத்தவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

20. தரிப்பிட சூழல் சட்ட விரோத நடவடிக்கைக்காக உபயோகிப்பதற்கு அதிகாரபத்திரயாளர் அனுமதி வழங்கப்படலாகததுடன் அவரினால் உரிய சூழலினுள் சமாதானத்தையும் நன்னடத்தையும் நடாத்திச் செல்லல் வேண்டும்.

21. எல்லா அனுமதிப்பத்திரதாரரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெற்ற சூழலில் தரித்திருக்கும் ஒவ்வொரு தனியாளரின் பெயர், நிரந்தர வதிவிடம், தொழில், தேசிய ஆளடையாளட்டை இலக்கம் குறிப்பிடப்பட்ட அட்டவணையை நடாத்திச் செல்லல் வேண்டும்.

22. எல்லா அனுமதிப்பத்திரதாரரும் வருடத்திற்கு ஒருமுறை கட்டிடத்தின் சுவர்களில், சிவிலினில் நல்ல வர்ணம் பூசப்படல் வேண்டியதுடன் மரத்தினால் செய்யப்பட்ட இடங்களை மெருகூட்டல் வேண்டும். வீட்டுதளத்தை நன்றாக கழுவி சுத்தம் செய்தல் அல்லது மெழுகு வர்க்கம் உபயோகித்து மெருகூட்டல் வேண்டும்.

23. எல்லா வகையில் அனுமதிப்பத்திதாரரும் தரிப்பிடத்தில் எல்லா பகுதியும் அந்த சூழல் மற்றும் வடிகால்களை மிகவும் சுத்தமாக வைத்திருத்தலுடன் மலசலகூடத்தின் குழியில் இருந்து அல்லது வடிகால்வாயில் இருந்து வீசுகின்ற துர் நாற்றம் ஆகியவற்றில் இருந்து பாதுகாத்து நடாத்திச் செல்லல் வேண்டும். அவரினால் வீட்டு உபகரணம், வேறு உபகரணங்கள் மிகவும் பரிசுத்தமாகவும் சுகாதார பாதுகாப்பிற்கு உரியதாகவும் நடாத்திச்செல்லல் வேண்டும்.

24. எல்லா தரிப்பிட அனுமதிப்பத்திரதாரரும் முற்றம் வடிகால்வாய் மற்றும் சூழல் உற்பட்ட பூமியை தினமும் சுத்தம் செய்தல் வேண்டும்.

25.எல்லா அனுமதிப்பத்திரதாரர் சமைக்கப்பட்ட உணவு பண்டங்களில் ஈக்கள் மற்றும் வேறு பூச்சிகள் மேயவிடாமல் பாதுகாத்து வைத்தல் வேண்டும்.

26. எல்லா தரிப்பிட அனுமதிப்பத்திரயதாரரினாலும் எல்லா குப்பை கூழங்கள் வீட்டு கழிவுப்பொருட்கள் வேறு தீங்கு விளைவிக்கும் பொருட்களை மூடிவைக்கக்கூடிய இருத்தல் வேண்டியதுடன் அவற்றை தினமும் சூழலில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கழிவுப் பொருட்கள் போடப்படும் போது அன்றி மற்றைய நேரங்களில் கழிவுப் பொருள் போடப்படும் பாத்திரத்தை மூடிவைக்க வேண்டும்.

27. ஏதாவதொரு அசாத்தியமான நோயினால் அல்லது தொற்று நோயினால் அவதிப்படுபவர் எவரையேனும் அனுமதிப்பத்திர தாரரினால் தங்களது சூழலுக்கு உற்படுத்தலாகாது.

28. (1) தரிப்பிடத்தில் இருக்கின்ற ஒருவர் ஏதாவதொரு அசாத்தியமான நோயினால் அல்லது தொற்று நோயினால் அவதிப்படுபவராயின் அந்த தரிப்பிட அனுமதிபத்திர தாரியினால் அது பற்றி தரிப்பிடம் அமைந்துள்ள பிரிவின பொது சுகாதார பரிசோதகரிற்கு அல்லது தவிசாளரிற்கு உடனடியாக அறிவித்தல் வேண்டியதுடன், தரிப்பிடத்தை விட்டு நீங்குமாறு தவிசாளரினால் கட்டளையிட்டால் உடனடியாக தரிப்பிட அனுமதியாளர் அவ்வாறு செய்தல் வேண்டும். இன்னும் அந்த நோய்க்கு உள்ளாகியவரினால் உபயோகிக்கப்பட்ட கட்டில் விரிப்பு மற்றும் வேறு பொருட்களில் நோய் கிருமிகளை அழிப்பதற்கும் மற்றும் சுவர்களில் வர்ணம் பூசுவதற்கும் அந்த அனுமதிப்பத்திரதாரியினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(2) அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெற்ற நிலையம் சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அல்லது அவரின் உதவியாளர் ஒருவரினால் பரிசோதித்து தொற்று நோய் இல்லை என்று உறுதிப்படுத்தி சான்று சமர்ப்பிக்கப்படும் வரை இந்த துணை விதியில் 28(1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த தரிப்பிட அனுமதிப்பத்திரதாரியினால் தரிப்பிடதாரி ஒருவரையேனும் பொறுப்பேற்றல் கூடாது.

29. எல்லா அனுமதிப்பத்திரதாரியும் தரிப்பிடத்தில் பாவிக்கப்படுகின்ற பாய், கட்டில் விரிப்பு, தலையணை மெத்தை ஆகியன சுத்தமாகவும் சுகாதார முறைப்படி நடாத்திச் செல்வதற்காக தேவையான எல்லா நேரங்களிலும் சுத்தம் செய்தல் வேண்டும்.

30. (1) தவிசாளர் அல்லது தவிசாளரினால் அதற்காக சாதாரணமாக அல்லது விஷேடமாக எழுத்துமூலம் அதிகாரம் அளிக்கப்படுகின்ற உத்தியோகத்தர் எல்லா சாதாரணமான நேரங்களிலும் தரிப்பிடத்திற்குட்பட்டு பரிசீலிப்பதற்கு சட்டம் உண்டு.

(2) அனுமதிபத்திரதாரி அல்லது தரிப்பிடத்தில் நடவடிக்கைகளுக்கு பொறுப்புள்ளவரினால் தவிசாளருக்கு அல்லது தவிசாளரினால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்படுகின்ற உத்தியோகத்தருக்கு தரிப்பிடத்தினுள் சென்று பரிசீலிப்பதற்கு அனுமதி அளிக்க வேண்டியதுடன் தவிசாளரினால் அல்லது அந்த உத்தியோகத்தருக்கு தேவையான எல்லா உதவியும் பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

31. இந்த துணை விதியை மீறுதல் பற்றி பிரதேச சபை சட்டத்தின் 122 (2) ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுத்தல் சட்டமாகும்.

32. உரிய நீதிமன்ற அதிகாரத்துடனான நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு மேலதிகமாக தரிப்பிடங்களுக்கு உரிய இந்த துணை விதியை இரண்டு முறை அல்லது அதற்கு மேற்பட்ட முறையில் மீறி இருப்பின் அதிகாரபத்திரத்தை இரத்து செய்தல் சட்டமாகும்.

33. பொருள்கோடல் தேவைப்படின்-

'ஒருவர்' என்பது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத கூட்டமைப்பு எனவும் ;

'தரித்திருப்போர்' என்பது பணம் செலுத்தி அல்லது சலுகை வழங்கப்பட்டு தரிப்பிடத்தில் உறங்குவதற்கான வசதி உட்பட தங்குமிடவசதி பெற்றுக்கொள்ளப்பட்ட ஒருவர் எனவும் ;

'பிரதேச சபை' என்பது உரிய பிரதேச சபை எனவும் ;

'அதிகாரபத்திரதாரர்' என்பது இந்த துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட தரிப்பிடத்தின் அல்லது இருப்பிடத்தின் முகாமைத்துவ நடவடிக்கை செய்து கொண்டு செல்லும் ஒருவர் எனவும் ;

'அதிகார பத்திர உத்தியோகத்தர்' என்பது பிரதேச சபை தவிசாளர் அல்லது செயலாளரினால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்படுகின்ற ஒருவர் எனவும் ;

'தரிப்பிடம்'என்பது பணம் செலுத்த அல்லது வேறு அறவீடுகளுக்காக உணவு உடன் அல்லது அன்றி உறங்குவதற்கான வசதி வழங்கப்படும் நிலையம் எனவும் ;

'தவிசாளர்' என்பது உரிய பிரதேச சபை தவிசாளர் எனவும், கருதப்படும்.

**1 ஆம் அட்டவணை**

**உறைவிடமும் தரிப்பிடங்கள் பற்றிய அதிகாரப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவம்**

1. விண்ணப்பதாரியின் பெயர் :----.
2. சொந்த முகவரி :----.
3. ஆளடையாள அட்டை இலக்கம் :----.
4. கிராம சேவகர் பிரிவு :----.
5. சேவையின் தன்மை :----.
6. சேவை நிலையத்தின் பெயர் :----.
7. அமைந்துள்ள இடம் :----.
8. சேவையை நடாத்திச் செல்லும் கால எல்லை :----.
9. கட்டிடத்தின் நில அளவு :----.
10. கட்டிடத்தின் உள்ள நுழைவின் அளவும் யன்னலின் அளவும் :----.
11. கட்டிடத்தின் நீளம்/அகலம்/உயரம் :----.
12. கூரை பற்றிய விபரம் :----.
    ஓடு/எஸ்பெஸ்ரோஸ்/ஓலை/தகரம் :----.
13. நிலம் பற்றிய விபரம் சீமெந்து/செங்கல்/நிலச்செங்கல் :----.
14. உடன்படிக்கை சான்றிதழ் பெற்று இருப்பின் இலக்கமும் திகதியும் :----.
15. ஈடுபடுத்தப்பட்ட சேவையாளர் எண்ணிக்கை :----.
16. இருப்பிடம் வழங்க முடிந்த அதிகூடிய எண்ணிக்கை :----.
17. தனி அறைகளின் எண்ணிக்கை :----.
18. இருவர் தங்கக்கூடிய அறைகளின் எண்ணிக்கை :----.
19. எல்லா அறைகளுக்கும் மலசலகூடம் உண்டா :----.
20. பொது மலசலகூடம் பெண்/ஆண் என்று ஒதுக்கப்பட்டுள்ளதா :----.
21. எல்லா அறைகளுக்கும் வெளியேற்றம் வழங்கப்பட்டுள்ளதா :----.
22. குளிப்பதற்கும் குடிப்பதற்கும் நீர் வழங்கப்பட்டுள்ளதா :----.
23. மலசலகூடத்திற்கு குழாய் நீர் வழங்கப்பட்டுள்ளதா :----.
24. இல்லையாயின் நீர் வழங்குவதற்கான ஏற்பாடு பற்றிய விபரம் :----.

25. கழிவு நீரை வெளியேற்றுவதற்கான ஏற்பாடு பற்றிய விபரம் :----.
26. நெருப்பணைக்கும் உபகரணங்கள் பற்றிய எண்ணிக்கை :----.
27. நீர் வடிமுனையின் எண்ணிக்கை :----.
28. மலசலகூட எண்ணிக்கை :----.
29. குளியல் அறைகளின் எண்ணிக்கை :----.
30. சமையல் அறையின் தளப் பரப்பளவு :----.
31. கீழ் காணப்படும் ஆவணங்கள் அறிவித்தல் பலகையில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளனவா என்பது :
(i) துணை விதியின் பிரதி ;
(ii) இருப்பிடம் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எண்ணிக்கை ;
(iii) இருப்பிடம் வழங்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரம் உள்ளடக்கிய அட்டவணை ;
(iv) பரிசீலிக்கும் உத்தியொகத்தரின் பதிவும் கையொப்ப அட்டவணை ;
(v) கட்டணங்களும் மற்றும் விலைகள் பற்றிய அறிவித்தல் பலகை ;
32. கடைசியாக சுண்ணாம்பு அல்லது வர்ணம் தீட்டப்பட்ட திகதி :----.

-----,
திகதி

----------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**2 ஆம் அட்டவணை**

***உறைவிடமும் தரிப்பிடங்கள் பற்றிய அனுமதிப்பத்திரம்***

1. அதிகாரபத்திரதாரியின் பெயர் :----.
2. உறைவிடத்தின்/தரிப்பிடத்தின் பெயர் :----.
3. முகவரி :----.
4. முகாமையாளரின்/உரிமையாளரின் பெயர் :----.
5. முகவரி : ----.
6. அமைந்துள்ள இடம் :----.
7. ஒரே முறையில் உட்படுத்தக்கூடிய ஆகக்கூடிய எண்ணிக்கை :----.
8. அறைகளின் எண்ணிக்கை : தனி : ----. இருவர் : ----.
9. உறைவிடத்தை/தரிப்பிடத்தை நடாத்திச் செல்வதற்கு அனுமதி வழங்கிய வருடம் :
10. அனுமதிப்பத்திர கட்டணம் செலுத்தப்பட்ட திகதி : ----. தொகை : ரூ.----. அதிகாரப் பத்திர இலக்கம் :----.

இடைநிலைச் சட்டத்தை மீறல் அல்லது வேறு காரணமாக இருந்து செய்யப்படின் இந்த அனுமதிப்பத்திரம் உரிய வருடத்தில் திசெம்பர் 31 ஆந் திகதி வரை தேர்தகவுடையதாகும்.

................ சரிசெய்யப்பட்டது

............... பரிசீலிக்கப்பட்டது

.................. அனுமதிக்கப்பட்டது

7-524/7

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.